Registered as a Newspaper பக்கங்கள் 8 விலை ரூபா 5-00

நல்லூர் பிரதேச நூலகம் யாழ்ப்பாணம்


# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி Peoples Daily

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 சித்திரை 14 (27.4.94) புதன்கிழமை ஓசை 68


## மேதினத்தை எழுச்சியுடன் நடத்த யாழ். குடாநாடு தயாராகிறது

இவ்வாண்டுக்கான தொழிலாளர் தினமான மேதின எழுச்சிக்கு தமிழீழம் தயாராகி வருகிறது. எதிர்வரும் மேதினத்தை உணர்வெழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கான தயாரிப்பு வேலைகளில் தமிழீழத் தொழிலாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். வட தமிழீழத்தின் அனைத்துப்பகுதிகளிலும் மேதின எழுச்சிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்கமுடிகிறது. மேதினத்தை மக்களுக்கு அறிவிக்கும் சுவரொட்டிகள் ஒருபுறம், ஒடுக்கப்பட்ட தொழிலாளர் சமூகத்துக்கு எழுச்சியூட்டும் வகையில் அமைந்த கோசங்களைத் தாங்கிய பதாகைகள் மறுபுறம், தொழிலாளர் (6-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு மாகாண இணைப்பு; ஆளும், எதிர்க் கட்சிகள் இணங்கா!

## பெண்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பகுதிகளில் இரட்டைப் பின்னல், கறுப்புப் பொட்டு மற்றும் கரியநிறத் தோற்ற முடைய இளம் பெண்கள் படையினரால் கைது செய்யப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

அண்மையில் ஆரையம்பதியிலுள்ள சோதனைத் தடை முகாம் ஒன்றில்வைத்து இளம் யுவதி ஒருவர் அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் அவருக்கு இது (6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிடம் ஹமீத் தெரிவிப்பு

(டில்லி)

**இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் நிரந்தரமாக இணைக்கப்படுவதை ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியோ அல்லது எதிர்க்கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியோ ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸீ. எஸ் ஹமீத் புதுடில்லியில் தெரிவித்தார்.**

இலங்கை-இந்தியவர்த்தக கூட்டுக் குழுவின் கூட்டம் புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் தினேஷ் சிங் தலைமையில் இடம் பெற்றபோது அதில் இலங்கைத் தூதுக்குழுவிற்கு தலைமை தாங்கிச் சென்ற அமைச்சர் ஹமீத் அங்கு மேலும் பேசுகையில், வடக்கு கிழக்கு பிரச்சினை தொடர்பாக ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் பாராளுமன்ற தெரிவுக் குழுவின் கூட்டத்தொடர்களில் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டதாகவும், வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பை இரு கட்சிகளும் எதிர்ப்பதாகவும் இந்தியவிலுள்ளது போல சமஷ்டி அமைப்பின் கீழ் அதிகார பரவலாக்கத்துக்கு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார் அத்துடன் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதிலும் தேசிய வருமானத்தில் பெரும் பகுதியை விழுங்கும் யுத்தத்தை நிறுத்துவதிலும் அரசு ஆர்வத்துடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

## மந்திரிசபையில் பாரிய மாற்றம் பிரதேச ரீதியாக நியமிக்க முயற்சி

அமைச்சரவையில் மிக விரைவில் பாரிய மாற்றங்கள் ஏற்படவிருப்பதாக ஆளும் கட்சி வட்டாரங்களை மேற்கோள்காட்டி 'சிலுமின' என்ற சிங்களப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் பிரதேசவாரியாக அமைச்சர்கள் நியமிக்கப்படவிருப்பதாகவும், சிறு அரசியல் கட்சிகளில் இருந்தும் அமைச்சர்கள் நியமிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது

பல புதிய முகங்களை அமைச்சரவையில் இணைப்பது குறித்தும் தற்போதுள்ள சில அமைச்சர்களின் அமைச்சுக்களிலும் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன குறித்தும் தற்போது தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

## முதன்மை ஆசிரியர் பதவிகள்

(நல்லூர்)

யாழ் கல்வி வலயம் ஒன்றில் முதன்மை ஆசிரியர்கள் பதவிகள் நிரப்பப்படவுள்ளன. இது தொடர்பாக ஏற்னவே பெறப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. 47 வெற்றிடங்களுக்கும் தற்பொழுது முதன்மை

## ஐ. தே. க. வேட்பாளர் பட்டியல் மே 15க்குள் அறிவிக்க கோரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் பெயர் விபரங்களை மே மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் தமக்கு அறியத்தருமாறு சிரேஷ்ட அமைச்சர்கள் கட்சிக கூட்டத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்ற கட்சிக் கூட்டத்திலேயே இவ் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் உரையாற்றிய சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கட்சியின் வெற்றிக்கும் முன்னேற்றத்திற்கும் உழைக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். பொதுத் தேர்தல் மிக விரைவில் நடைபெறவிருப்பதால் கட்சியின் செயற்திட்டத்தைக் கொண்டுசெல்ல பலம் வாய்ந்த அணியொன்று தேவை இந் நிலையில் எம்மிடையேயுள்ள சிறு பிணக்குகளைப் பெரிதுபடுத்தக் கூடாது என தெரிவித்தார்.

தென்மாகாணசபைத் தேர்தலின்போது ஐக்கிய தேசியக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலில் போட்டியிட பிரதமர் ரணில் தயக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்தபொதுத் தேர்தலில் எங்கும் போட்டியிட மாட்டார் எனவும் இவர் தேசியப் பட்டியலின் மூலம் பாராளுமன்றத்திற்கு செல்ல திட்டமிட்டுள்ளார் எனவும் தெரியவருகிறது.

இவர் கடந்த முறை கம்பஹா மாவட்டத்திலுள்ள பிபில தேர்தல் தொகுதியில் தெரிவு செய்யப்பட்டிருந்தார் எனினும் இம்முறை மாகாண சபைத் தேர்தலில் அத்தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. இதனைத் தொடர்ந்து இவர் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட இருந்தார் எனினும் இவர் தேர்தலில் போட்டியிட மாட்டார் என உறுதி

## பதவிவிலகுமாறு ஜனாதிபதி என்னைக் கேட்கவில்லை

### சிறிசேன கூரே கூறுகிறார்

(கொழும்பு)

''ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில்

மேற்படிபதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி என்னைக் கேட்கவில்லை எனவே

கட்சி வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'சிலுமின' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

நாட்டின் அனைத்துப் பிர சிறு அரசியல் கட்சிகளில் இருந்தும் அமைச்சர்கள் நியமிக்கப்பட இருப்பதாகவும் கூறப்படுகிறது

பல புதிய முகங்களை சுக்களிலும் சில மாற்றங்கள் செய்யப்படவுள்ளன குறித்தும் தற்போது தீவிரமாக ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

# உயர் இராணுவ அதிகாரி மீது விசாரணை மேற்கொள்ள பணிப்பு

[கொழும்பு]

உயர் இராணுவ அதிகாரி ஒருவரின் நடத்தை சம்பந்தமாக உயர்மட்ட விசாரணை மேற்கொள்ளும்படி பாதுகாப்பு அமைச்சு பணித்துள்ளது.

இந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக தனித்தனியாக மூன்று குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. ஒரு குற்றச்சாட்டை பொலிஸ் மா அதிபர் பிரங் டி சில்வா வே பாதுகாப்புச் செயலாளர் ஹமில்டன் வனசிங்க வுக்குச் செய்துள்ளார்.

குற்றச் சாட்டுகள் தொடர்பாக இந்தச் சிரேஷ்ட இராணுவ அதிகாரி இராணுவ

[6ஆம் பக்கம் பார்க்க

# சுதந்திரக் கட்சியில் இணைவதற்கு அநுரா பண்டாரநாயக்கா விருப்பம்

## தாயாருடன் இரகசியப் பேச்சு

(கொழும்பு)

அநுரா பண்டாரநாயக்கா மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இணைந்து கொள்வது குறித்து தீவிரமாக ஆலோசித்து வருகிறார்.

மேற்படி முயற்சியின் முதற்கட்டமாக திரு. அநுராபண்டாரநாயக்க தமது தாயாரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியுமான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுடன் இரகசியமான முறை

(6 ஆம் பக்கம் பார்க்க)

# வட பகுதி தாக்குதலுக்கு முன்னர் விமான குண்டு வீச்சுக்கு உத்தரவு

## ஹமில்டன் வனசிங்க பிறப்பித்தார்

வட பகுதி மீது சிறிலங்காப் படையினர் மேற்கொள்ளவுள்ள தாக்குதல்களுக்கு முன்னோடியாக அப் பகுதியில் வான் வழி தாக்குதல்களை நடத்துமாறு சிறிலங்காவின் விமானப் படைக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹமில்டன் வனசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அடுத்த மாதத்தில் குடாநாடு மீதான தாக்குதலுக்கு ஜனாதிபதி அனுமதி அளித்திருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அத்துடன் வட பகுதி நடவடிக்கைக்கு தேவையான ஆட்பலம் திரட்டும் நடவடிக்கையும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இதேவேளை சிறிலங்கா

[6ஆம் பக்கம் பார்க்க]

# மண்டூரில் குண்டுவெடிப்பு நான்கு பொதுமக்கள் காயம்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மண்டூரில் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்றின்போது நான்கு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இச் சம்பவத்தின் போது காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு பொது மருத்

[6ஆம் பக்கம் பார்க்க]

தொடர்பாக ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. 47 வெற்றிடங்களுக்கும் தற்பொழுது முதன்மையாசிரியர் சேவையில் இல்லாதவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. போட்டிப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை ஆகியவைகள் மூலம் இந்த வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன.

## தந்தை செல்வா சிரார்த்த தினம்

(யாழ்ப்பாணம்)

தந்தை எஸ். ஜே வி. செல்வநாயகத்தின் 17 ஆவது சிரார்த்த தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இவரது நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபிக்கு நேற்று மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

## ஏற்பு வலிக்கு ஒருவர் பலி

(வடமராட்சி)

ஏற்புநோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் இரவு மரணமானார். எழுதுமட்டுவாழைச் சேர்ந்த மாரிமுத்து தேவபாலன் (வயது 32) என்பவரே இவ்வாறு மரணமானவராவார். (யோ)

## வடக்கின் கீழ் திருமலை

வடபகுதி இராணுவத் தலைமையகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் திருகோணமலையும் கொண்டுவரப்பட்டுள்ளது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று படகுச்சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்

## சிறிசேன கூரே கூறுகிறார்

(கொழும்பு)

''ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து நான் விலகப் போவதில்லை'' இவ்வாறு திரு சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

மேற்படிபதவியில் இருந்து விலகுமாறு ஜனாதிபதி என்னைக் கேட்கவில்லை எனவே நான் அப்பதவியில் இருந்து விலகப்போவதில்லை என்று அவர் கூறினார்.

இதனைத் தொடர்ந்து இவர் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட இருந்தார் எனினும் இவர் தேர்தலில் போட்டியிட மாட்டார் என இறுதியாகக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சிறிமானி அத்துலத் முதலி ஐ. தே. கவில் சேர மறுப்பு

(கொழும்பு)

முன்னாள் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் மனைவி சிறிமானி அத்துலத் முதலியை ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்த்துக் கொள்ளும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஒரு குழுவினர் முயற்சி செய்துவருவதாக 'ராவய' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள ஜனாதிபதி டி பி விஜேதுங்காவை எதிர்க்கும் அணியினரே சிறிமானி அத்துலத் முதலியை இணைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுவருவதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு இணைந்து கொள்ள சிறிமானி அத்துலத் முதலி இணங்கினால் அத்துலத்முதலியின் சகோதரரான கஜந்த அத்துலத் முதலிக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட வாய்ப்பும் சிறிமானி அத்துலத் முதலிக்கு வெளிநாட்டு தூதுவர் பதவியும் வழங்குவதற்கு ஏற்பாடும் செய்யப்படும் என்று உறுதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள சிறிமானி அத்துலத்முதலி மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது தனது கணவரின் கொலை தொடர்பாக பூரண விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டால் மட்டுமே ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்தப் பேச்சும் நடத்தப்படும் எனவும் இல்லாவிடின் எந்தவித பேச்சுக்கும் இடமில்லை என சிறிமானி அத்துலத்முதலி கூறியுள்ளதாக ''ராவய'' பத்திரிகை கூறுகிறது.

# வரவு செலவு திட்டத்தின்கீழ் 16. 5 மில்லியன் ஒதுக்கீடு

(நல்லூர்)

பன்முகப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் 1993-க்கு 20 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது இதில் 3.5 மில்லியன் ரூபா கிளிநொச்சிக்கு ஒதுக்கப்பட்டது போக மிகுதித் தொகைதான் யாழ்ப்பாணத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்று செயலக வட்டாரத்தினர் தெரிவிக்கின்றனர்: 1993 தொடர் வேலைகளுக்கே இந்தப் பணம் பயன்படுத்தப்படும்.

யாழ்ப்பாணத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணம் 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் தலா 1,178, 500 ரூபா என்ற முறையில் பிரித்து வழங்கப்படவுள்ளது. சுமார் 3,000 பேர்வரை வாழும் நெடுந்தீவு, வேலணை, ஊர்காவற்துறைக்கும் ஏனைய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கும் ஒரே அளவு நிதி வழங்கப்படுவது குறித்து சில அதிகாரிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அதேவேளை 1991, 1992 ஆண்டுகளுக்கான நிதி இதுவரை வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது

## அரசிற்கெதிரான சக்திகளுக்கு

# எல்லாளன் படையின் கடிதங்கள் பயன்படுகின்றன

எல்லாளன் படையினர் அனுப்பியுள்ள கடிதங்களை அரசுக்கு எதிரான சக்திகள் தமக்குச் சாதகமாகப் பாவிக்கின்றன என்று பொலிஸ் புலனாய்வுத் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எல்லாளன் படையினரின் அச்சுறுத்தல் கடிதங்கள் அனைத்து உல்லாசப் பயணிகள் விடுதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளதாக புலனாய்வுத்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வரி விளம்பரம்

**காவேரி சீயாக்காய்ப் பவுடர்**

இன்றுதமிழீழத்தில் மிகவும் மக்கள் விரும்பிப் பாவிக்கும் சீயாக்காய்ப்பவுடரின் தரம்நிரந்தரம்சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்காதீர்கள் காவேரி சீயாக்காய்ப் பவுடர் என்று கேட்டு வாங்குங்கள்- (7898)

**இன்று ராகு, கேது மாற்றம்**

வாக்கியப்படி இன்று (27-4-94) ராகு, கேதுக்கள் துலா, மேட ராசிகளுக்குமாற்றமடைகின்றன உள்நாட்டு, வெளிநாட்டு ஜாதகங்கள்கணித்துக் கொடுக்கப்படும் T-V. பாலா (சோதிடர்) சோதிட நிலையம் இணுவில். (8136)

**பழங்கள் தேவை**

உங்கள் வீட்டுத் தோட்டங்களில் உள்ள பசன் பழங்களையும், பப்பாசிப் பழங்களையும் நாம் கொள்வனவு செய்கிறோம்:
TASTELINE INDUSTRIES (PVT) LTD, 14, Seenier Lane, JAFFNA (சி-9053)

**துளிர்**

தமிழ்நாடு புதுவை அறிவியல் இயக்கம் இணைந்து வெளியிடும் சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் விற்பனையாகிறது வசந்தம் புத்தக நிலையம் சந்தா ஏற்றுக் கொள்ளப்படும். (8085)

## கலந்துரையாடல்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கிராமிய உற்பத்திக் குழுக்களை இணைத்த வகையிலான கலந்துரையாடலை நடத்திவருகிறது.

இந்த வகையில் இன்று 27-ம் திகதி வரணி தபாற்கந்தோரில் காலை 10-00 மணிக்கும் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையில் மாலை 2 மணிக்கும், சங்கத்தானை சாராசனசமூகநிலையம், துன்னாலை மந்திகைப்பாடசாலை, தம்பசிட்டி பாடசாலை ஆகிய இடங்களில் மாலை 3 00 மணிக்கும், மட்டுவில் அமெரிக்கன் மிசன் பாடசாலையில் மாலை 4 00 மணிக்கும் 28-ம் திகதி மாலை 3மணிக்கு புற்றாலை மகாவித்தியாலயத்திலும் இக்கலந்துரையாடலை நடத்த ஏற்பாடாகியிருக்கிறது

விவசாய உள்ளீடுகள் விநி

# அரசதிணைக்களவெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

(நமது நிருபர்)

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கான நடவடிக்கையில் யாழ் அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார்

இது குறித்து ஒவ்வொரு திணைக்களங்களையும் தத்தமது திணைக்களங்களில் உள்ள வெற்றிடங்கள் பற்றிய விபரங்களை அனுப்பி வைக்கும்படி அரச அதிபர் ஒவ்வொரு திணைக்களங்களையும் கடிதமூலம் கேட்டிருந்தார். இதுவரை 5 திணைக்களங்களே வெற்றிட விபரங்களை அறிவித்துள்ளன ஏனைய திணைக்களங்களையும் உடனடியாக அனுப்பி வைக்கும்படி அவர் அவசர செய்தி ஒன்றின் மூலம் கேட்டுள்ளார்.

(ச, சி)

# அரசியலுக்கு வருவதற்கு கல்வி அவசியமானஒன்றல்ல

**முன்னாள் ஜனாதிபதி ஜே, ஆர்**

(கொழும்பு)

கல்வித் தராதரம் உள்ளவர்களுக்கு மட்டுமே அரசியல் என்று மட்டுப் படுத்தப்பட்டால் மறைந்த ஜனாதிபதி பிரேமதாசா மட்டுமல்ல, டி. எஸ் சேனாநாயக்க, ஜோன் கொத்தலாவல போன்றோரும் அரசியலுக்கு வந்திருக்க முடியாது.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தெரிவித்தார். ரஞ்சன் விஜயரட்ணா பாதுகாப்பு கல்வி விஞ்ஞான பீடத்தின் அரசியல் பயிற்சி மாணவர்கள் மத்தியில் உரையாடிய ஜே. ஆர் மேலும் கூறுகையில், சமஷ்டி அமைப்பு அன்று வழங்கப்பட்டிருந்தால் சிங்கள மக்கள் முடிந்திருப்பார்கள் என்றும். கிழக்கு மக்கள் வட பகுதியில் உள்ளவர்களுக்கு அடிமையாக விரும்பவில்லை என்றும் ஒரு கட்டத்தில் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி தாக்கப்பட்ட சம்பவம் பற்றிய கேள்விக்கு பதிலளிக்கையில், ராஜீவ் விமானத்தில் ஏறிய பின்னரே அவர் தாக்கப்பட்டது பற்றி தான் அறிந்து கொண்டதாகவும், உடனே தொலை பேசியில் தொடர்பு கொண்டு காயம் ஏதும் உண்டா எனக் கேட்டதாகவும் தெரிவித்தார் சம்பவம் நடந்தபோது சிறிது தூரத்தில் விலகி இருந்தமையால் கடற்படையில் ஒருவர் நினைவு மயங்கி விழுவதாகவே நினைத்திருந்தேன் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் தனது தந்தையார் சேகரித்து வைத்திருந்த புத்தகங்களில் சுமார் 90 வீதமானவற்றை தான் வாசித்து இருப்பதாகவும் கூறினார்.

## தென்னிந்திய திருச்சபை - யாழ் ஆதீனம் நம்பிக்கை இல்லம் (*HOUSE OF HOPE*)

மேற்படி இல்லத்திற்கு உடல் ஊனமுற்ற, வலது குறைந்த ( Physicaliy disabled ) ஐந்து (5) வயதிற்கும் பதினாறு (16) வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர், சிறுமிகள் சேர்த்துக்கொள்ளப்பட இருக்கின்றனர். இதற்கு தகுதியுடையவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் குடும்ப விபரத்துடன் திருமதி P. கதிர்காமர் அவர்களை இறையியல் கல்லூரி, மருதனார்மடம், சுன்னாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயத்திட்ட பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை

ஆதீனக் காரியாலயம்,
வட்டுக்கோட்டை.

(சி. 9272)

## பிற்போடப்பட்டுள்ளது

ஸ்ரீசபாபதி நாவலர் சனசமூக நிலைய நிதி வளர்ச்சிக்காக 27-04-94 அன்று நடைபெற இருந்த கலை நிகழ்ச்சிகள் யாவும் தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

— நிர்வாகம்.

(8145)

## பிற்போடப்பட்டுள்ளது

யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி உயர்தர வர்த்தக மாணவர் மன்றத்தின் சஞ்சிகை வெளியீட்டுக்கான 27-04-1994-ம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 06-05-1994-ம் திகதி பி. ப. 4 00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதினை அறியத் தருகின்றோம்

உயர்தர வர்த்தக மாணவர் மன்றம்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

(8144)

## கண்ணீர் அஞ்சலி

**முருகேசு தம்பிமுத்து - சி.ஏ.எஸ்**

[இளைப்பாறிய உதவி அரசாங்க அதிபர் பருத்தித்துறை]

மண்ணில்: 02. 07. 1923 விண்ணில்: 23 04 1994

என்பதவி எனக்காகவல்ல அது என் மக்களுக்காகவே
என்ற நிலையில் என்றும் தளராது உழைத்து
அரசாங்க எழுது வினைஞர் சங்கத்
தலைமை ஏற்று வழி நடத்தி
நிர்வாக சேவையில் பல்லாண்டு
பணிபுரிந்து இளைப்பாறி
மாவட்ட சபை அங்கத்தவராகிச்
சேவை செய்து தொடர்ந்தும்
மக்கள் சேவை தொடரும் பொழுது
காலன் கண்பட்டாய் எம்மைக்
கண்ணீரில் நீந்த வைக்க.

பருத்தித்துறை, பிரதேச செயலரும்,
பிரதேச செயலக ஊழியர்களும்.

(8143)

## நினைவு கூருகின்றோம்.

**1994-04-27**

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்காக் கடற்படையினரின் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

அர்ச்சுனா (பொன்னுத்துரை மித்திரா- சின்னஉப்போடை - மட்டு)

லெப் கரிகா (இரா. பாலேந்திரன்- திருமலை)

கப்டன் அலெக்ஸ் (கந்தசாமி நித்தியானந்தன் - நல்லூர் வடக்கு - யாழ்)

2ம் லெப். ரங்கா (சிங்காரவடிவேல் இராசகுமார்- ஊரிக்காடு - வல்வெட்டித்துறை)

2ம் லெப் துரைக்குட்டி (சிவகுருநாதன் இராசவடிவேல் - வல்வெட்டித்துறை)

நளினன் (சச்சிதானந்தம் பிரதாபன் - நவாலி மானிப்பாய்)

கார்த்திக் (நடராஜா கார்த்திகேசு - ஆதிகோவிலடி - வல்வெட்டித்துறை

தெய்வா (ஐயாத்துரை சிவநாதன் - மாதகல்-யாழ்)

காந்தன் (சிவசுந்தரம் விஜயதாஸ் - கடற்கரைவீதி- வல்வெட்டித்துறை)

யேசு பத்மநாதபிள்ளை ரவீந்திரா - முனிவைரவர் கோயிலடி - அளவெட்டி)

1987ஆம் ஆண்டு யாழ் - கோட்டைப். பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

ரஞ்ஜன் (ஆறுமுகம் ரட்ணராஜா - ஓட்டுமடம் யாழ்)

1988 ஆம் ஆண்டு திருமலை- மூதூர், கட்டைபறிச்சான் பகுதியில் 'ஜிகாத்' குழுவினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய-

கலீல் (கலீல் ரகுமான் - தோப்பூர், திருமலை)

சரவெட்டி - கப்பூதுவெளியில் இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

நெல்லியடிப் பிரதேசப் பொறுப்பாளர்,

கப்டன் மோகன் மாஸ்டர் (முருகேசு ஜெயக்குமார் - சோழங்கன், கரணவாய் தெற்கு)

## தென்னிந்திய திருச்சபை யாழ். ஆதீனம், சாவகச்சேரி தொழிற்பயிற்சி நிலையம்

மேற்படி தொழிற்பயிற்சி நிலையத்தில் தையல் பயிற்சி, தமிழ், ஆங்கில சுருக்கெழுத்து, தட்டச்சு ஆகிய நெறிகளில் பயிற்சி பெற விரும்புவோர் உங்கள் விண்ணப்பப் பத்திரங்களை காலை 9-00 மணி முதல் மதியம் 12-00 மணி வரை பின்வரும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

"குரு இல்லம்"
தென்னிந்திய திருச்சபை,
சாவகச்சேரி.

## தவறிவிட்டது

23-04-94 காலை சங்கானை - கிளாலிக்கு பயணம் செய்யும்போது சவுந்தரநாயகம் புஸ்பரெத்தினம் என்பவருடைய அடையாள அட்டை (இல287480725V) யும் வடபகுதிக்கு வெளியே செல்லும் பாஸ் றோஸ்கலர் பேர்ஸ் ஆகியவை தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும், (8138)

விவசாய உள்ளீடுகள் விநியோகம், தொழிலாளர் தினம் ஆகியவை தொடர்பான இக் கலந்துரையாடல் கடந்த சில நாட்களாக பல்வேறு பகுதிகளிலும் நடைபெற்று வருகின்றது.

இக்கலந்துரையாடலில் கிராமிய உற்பத்திக் குழுக்கள் விவசாயிகள் தொழிலாளர்கள் அனைவரையும் கலந்து கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்


விண்ணப்ப முடிவுத் திகதி 10-05-1994

குறிப்பு;- கடைசியாக முடிவடைந்த பயிற்சி நெறியில் பங்குபற்றி சான்றிதழ்களை பெறாதவர்கள் மேற் குறிப்பிட்ட விலாசத்தில் உங்களது சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளலாம்

செயற் திட்டப் பணிப்பாளர்,
தென்னிந்திய திருச்சபை

ஆதீனக் காரியாலம்,
வட்டுக்கோட்டை.

(சி-9271)



# விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

96

கலை, வர்த்தகம்

அடுத்த புதிய பிரிவு ஆரம்பம்

30 - 04 - 94

காலை 8 மணி

| | | |
|---|---|---|
| பொருளியல்<br>திரு கலாகரன் | கணக்கியல்<br>திரு.S.K.பிரபாகரன் | வர்த்தகம்<br>திரு. தேவா |
| அளவையியல்<br>திரு விக்கி | தமிழ்<br>திரு. குழந்தை | இந்து / நாகரிகம் / சமயம்<br>திரு. காரை சுந்தரம் பிள்ளை |
| புவியியல்<br>திரு. குணராசா | அரசியல்<br>திரு. சிலன் | வரலாறு<br>திரு சிறிதரன். |

இதுவே இறுதி பிரிவாகும்

அனுமதிகள் இன்று முதல் பெற்றுக்கொள்ளவும்

(சி-9270)



# வேலை வாய்ப்புக்கள்

பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு வேலைவாய்ப்புகள் உள்ளன.

1. வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்

வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். வானொலி நிகழ்ச்சிகள் (நாடகம், பேட்டி, சித்திரம்) எழுதக்கூடிய ஆற்றல் அல்லது வானொலி நிகழ்ச்சிகளுக்குக் குரல் கொடுக்கக் கூடிய ஆற்றல் இருப்பின் அது மேலதிக தகைமையாக கருதப்படும்.

2. வீடியோ நிகழ்ச்சி தயாரிப்பாளர்

வீடியோ நிகழ்ச்சிகள் தயாரிப்பதில் ஆர்வம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம் எனினும் வீடியோ எடுக்க தொகுக்கக்கூடிய ஆற்றலும், அனுபவமும் இருப்பின் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 06.05.1994

விளம்பர இல 326
ஈழநாதம்

(சி 9266)



# எமது புதிய வெளியீடுகள்

(1) ரஜனிகாந் - மீனா...
வீரா

(2) பிரபுதேவா - சரத்குமார் - ரோஜா
இந்து

(3) கார்த்திக் - சுகன்யா
சீமான்

(4) சத்தியராஜ் - சுகன்யா
வண்டிச் சோலை சின்னராசு

## வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

(சி-9264)


2ம் லெப். முரளி-சார்ள்ஸ் (சந்தவனம் தவக்குமார் - கப்பூது, கரணவாய் தெற்கு)

ஜட்சன் ஜவாகர் (கதிர்காமநாதன் இராகவன்- கரவெட்டி மேற்கு)

1991-ம் ஆண்டு கிளி-ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

இநயா (கனகசுந்தரம் ரவீச்சந்திரன்-முள்ளிவாய்க்கல்-முல்லைத்தீவு)

சுருளி (விநாயகமூர்த்தி கந்தலிங்கம்-வற்றாப்பளை-முல்லைத்தீவு)

கப்டன் றொசான் (மாசிலாமணி சேகர் கிளிநொச்சி)

கிங்ஸ்லி (அம்பலம் பாஸ்கரன்-இரணைமடு - கிளிநொச்சி)

திலகன் (ஆறுமுகம் காமராஜி-முருகண்டி-கிளிநொச்சி)

பீற்றர் (குணரட்ணம் மோகன்ராஜ்-பூவரசங் குளம்-துணுக்காய்)

புலி (நடராசா சிவலோகநாதன்-தென்னியங்குளம்-துணுக்காய்)

கருணா (சரவணன் சந்திரகுமார்-திருநகர் வடக்கு-கிளிநொச்சி)

சர்மா/சலீமான் (சுப்பையா மனோகரன்-செல்வநகர்-கிளிநொச்சி)

தியாகு (பெருமாள் அரிச்சந்திரன்-கண்ணகிபுரம்-கிளிநொச்சி)

வேந்தா (ஆறுமுகம் ஞானச்சந்திரன் கண்டாவளை-பரந்தன்)

இராமதாஸ் (செல்லையா பாலசுப்பிரமணியம்-பொன்நகர்-கிளிநொச்சி)

எட்வேட் (தங்கவேல் கனகசுந்தரம்-உருத்திரபுரம்-கிளிநொச்சி)

முகிலன் (இராமு குகநாதன்-அம்பாள்புரம்-மாங்குளம்)

போல் (முருகையா உதயகுமார்-இத்தாவில்-பளை)

1993ஆம் ஆண்டு மியாங்குளம் காட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய-

கதிரேசன் (தம்பிராசா நேசதுரை - கல்முனை அம்பாறை)

லெப். தர்மராசா - ஜோசப் (நாகமணி ஜேசுராஜ் - மட்டு)

2-ம் லெப். அமலநாதன் (ஆறுமுகம் ஜீவப்பிரகாஸ்- மட்டு)

மதுரகீதன் (நடராசா ஈஸ்வரன்- மட்டு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-9253)

நல்லூர் பிரதேச நூலகம் ... யாழ்ப்பாணம்

# அ. தி. மு. க - காங்கிரஸ் உறவிற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிட்டதா?

காங்கிரஸ் கட்சிக்கும் அ. தி. மு. க. வுக்குமிடையே உறவு ஓரேயடியாக முறிந்து விட்டது. கந்தர்வ விவாகம் கசந்து விவாகரத்தில் முடிந்து விட்டது. நிஜப் பேச்சிலும் செயலிலும் நிதானத்துக்குப் பெயர்போன மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர், ''போர்க்களத்தில் எல்லைக் கோடுகள் வரையப்பட்டு விட்டன. சுட்டமண் ஒட்டாது... இனி அ. தி. மு. க. உறவு கிடையாது'' என்றார்

''காங்கிரஸ் கட்சியோடு இனி ஒட்டும் இல்லை உறவும்இல்லை...பற்றும்இல்லை, பாசமும் இல்லை. மயிலாப்பூர், பெருந்துறை இடைத் தேர்தல்கள் மட்டுமின்றிவேறு எந்தத் தேர்தலிலும் இரண்டாண்டுகள் கழித்து வரவிருக்கும் பொதுத் தேர்தலிலும் காங்கிரஸ்கட்சியுடன் உறவு-கூட்டு என்பது அறவே கிடையாது. சொந்தப் பலத்தில்-சொந்தக்காலில் நின்று, இனி வரவிருக்கும் தேர்தல்களில் அ. தி மு.க போட்டியிடும்'' என்று ''மங்கம்மா சபதம்'' முதலமைச்சர் ஜெயலலிதா உறுதிபடக் கூறிவிட்டார்.

''அடுத்த ஆண்டு நடைபெறவிருக்கும் ராஜ்ய சபைத் தேர்தலில் முதல்வரின் இந்த அறிவிப்பு, காங்கிரஸுக்குப் பதிப்பு ஏற்படுத்தாதா?'' என்று காங்கிரசின் மூத்த தலைவர் ஒருவரிடம் கேட்கப்பட்டபோது ''ராஜ்யசபைத்தேர்தல் வருவதற்கு இன்னும் பதினைந்து மாதங்கள் இருக்கின்றன. இடைப்பட்ட இந்தக் காலத்தில் என்ன நடக்கும் என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடியாது. அப்போது அ தி மு. க அரசு இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளலாம்'' என்று எந்த விதமான சலனமோ, சஞ்சலமோ இல்லாமல் அந்தத் தலைவர் கூறினார்.

ஜெயலலிதாவின் இந்த ஆக்ரோஷமான அறிவிப்புக்குச் சில முக்கிய காரணங்களையும் அவர் சொன்னார்...

ஜெயலலிதா ஆட்சி மீது ஊழல் புகார் பட்டியலை மாநில காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தி கொடுத்தபோது, 'உங்கள் முயற்சி வெற்றிபெற என் வாழ்த்துக்கள்' என்று கவர்னர் சென்னாரெட்டி கூறியதாக வெளி வந்த செய்தி.. அ.தி மு.க விலேயே குறிப்பாக நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களிடையே தங்களது அரசியல் எதிர்காலம் குறித்து ஏற்பட்டுள்ள சந்தேகம் - சலசலப்பு; குறிப்பாக, புதுடெல்லியில் நாடாளுமன்ற அ. தி. மு. க. குழுத்தலைவர் ஜி. சுவாமிநாதன் கூட்டிய கூட்டத்துக்குச் சுமார் அரைடசின் எம். பி.க்கள் செல்லாமல் புறக்கணித்தது. ஆளுங் கட்சி எம். எல் ஏ.க்கள் சிலரிடம் தோன்றியுள்ள ஊசலாட்டம்...

ஊழல் புகார் கொடுத்த ஒரு வார காலத்துக்குள்ளாகவே அந்த ஊழல்பட்டியலை ஜனாதிபதி, பிரதமர், உள்துறை அமைச்சருக்கு கவர்னர் சென்னாரெட்டி மேல் நடவடிக்கைக்காக அனுப்பி வைத்தது...

சில மூத்த அதிகாரிகளைக் கட்சி நிர்வாகிகள் போலச் செயல்படச் செய்து, அதிகார வர்க்கத்தின் மத்தியில் ஒரு நிலை குலைவை ஏற்படுத்தியது போன்ற புகார்கள் கவர்னர் அவ்வப்போது அனுப்பும் அறிக்கையில் இடம் பெற்றிருப்பது முதல்வருக்கு எரிச்சலூட்டியுள்ளது.

குறிப்பாக போயஸ் தோட்டத்து 'முடிசூட்டப்படாத முதல்வர்' என்று பெயரெடுத்துள்ளஒருபெண்மணியால் அரசியல் சட்டத்துக்கு முரணான ஆளுகை அவருடைய வாய்மொழி உத்தரவை வேதவாக்காக நம்பி இடை நிலை அதிகாரிகள் செயல்படுவது குறித்து, சில குறிப்பிட்ட நிகழ்வுகளையும் அந்த அறிக்கையில் கவர்னர் குறிப்பிட்டிருப்பது மேலும் ஆத்திரமடையச் செய்துள்ளது இவையே முதல்வரின் காங்கிரஸ் அ. தி. மு. க விவாகரத்துப் பிரகடனத்தின் பின்னணி என்று எதிர்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

''மூப்பனார் கோஷ்டி, வாழப்பாடி கோஷ்டி என்று காங்கிரஸில் பிளவு... கருணாநிதி தி. மு. க என்றும், வை கோபாலசாமி தி. மு. க என்றும், தி. மு. க வில் பிளவு... இடது கம்யூனிஸ்ட் கட்சி - தி. மு க ஊடல்... முஸ்லிம் லீக்கில் இரு கோஷ்டி ஆகியவை தேர்தலில் தனக்குச் சாதகமாக இருக்கும் என்று கணக்குப் போட்டு முதல்வர் பேசியிருக்கிறார்'' - இவ்வாறு விமர்சித்தார், ஒரு காங்கிரஸ் தலைவர் - அரசியலில் எதுவும், எப்போதும், எப்படியும் நடக்கலாம்... அந்தவகையில் முதல்வரின் கணக்கு 'பாஸ் மார்க்' வாங்குமா என்பது சந்தேகம்'' என்று அவர் கேலி செய்தார் நமது நிருபரிடம்.

## நியமனம் இல்லை

(முல்லைத்தீவு)

கடந்த1989-ம்ஆண்டுமுதல் இன்றுவரை முல்லைத்தீவில் தொண்டர் ஆசிரியர்களாக கடமையாற்றும் 14 தொண்டர் ஆசிரியர்களுக்கு இதுவரை நிரந்தர நியமனம் வழங்கப்படாது உள்ளதாக புகாரிடப்பட்டுள்ளது.

# உடுகம்போல மனித உரிமை மீறியவராக அரசு கருதவில்லை

(கொழும்பு)

கறுப்புப் பூனைகள் எனும் அமைப்பு இருந்ததாகக் கூறுவதற்கு சாட்சி இல்லை என கடந்த வெள்ளியன்று பாராளுமன்றத்தில் கூறப்பட்டது. கேள்வி நேரத்தின்போது வாசுதேவ நாணயக்கார கேட்ட கேள்விக்கு பதிலாகவே இவ்வாறு கூறப்பட்டது.

முன்னைய பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொலவினால் அம்பலப்படுத்தப்பட்ட கறுப்புப் பூனைகள் என்ற பெயரில் இயங்கி ஆட்களை கடத்திச் சென்று கொலை செய்த இயக்கம் எவரைக் கொண்டு அமைந்தது? யாரால் உருவாக்கப்பட்டது? எவ்விதம் இயக்கப்பட்டது என வாசுதேவ நாணயக்கார பாராளுமன்றில் கேள்வி எழுப்பினார்

பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க இதற்கு பதிலளிக்கையில் கறுப்புப் பூனைகள் என்ற அமைப்பு இருந்ததற்கு சாட்சியங்கள் இல்லை இந்த அமைப்பினால் நிகழ்த்தப்பட்ட கடத்தல். கொலை ஆகியவற்றை தவிர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாமென உடுகம்பொலவுக்கு உத்தரவிட்ட எவரையும் இனம்காணத் தேவையான விபரங்கள் குற்ற விசாரணை திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விசாரணைகளில் வெளிவரவில்லை.

கடந்த வன்செயல் காலத்தில் மனித உரிமைகளை மீறிய முக்கிய பொலிஸ் உத்தியோகத்தர் உடுகம்பொல என அரசு ஏற்றுக்கொள்ளவில்லை முன்னைய ஜனாதிபதி, உடுகம்பொலவுக்கும்இன்னும் சிலருக்கும் அரசியல் பழிவாங்கல் உத்தரவு பிறப்பித்தாரா? அப்படியானசெயலை தாம் பொறுப்பேற்க முடியாது என உடுகம்பொல முன்னாள் ஜனாதிபதிக்குக் கூறினாரா? அப்படி உத்தரவிடப்பட்ட சட்டவிரோத செயல்கள் பொறுப்பேற்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது யாரால்? என்ற விபரங்களும் விசாரணையில் வெளியாகவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்

## கருத்துரை

(குருநகர்)

யாழ் - பிரதான வீதி திருமறைக் கலாமன்ற கேட்போர் கூடத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு பண்பாட்டுத் தொடர் கருத்தரங்கு நடைபெறும்.

''பண்பாடு மாற்றுக் குட்டையல்ல'' என்னும் தலைப்பில் செல்வி நா. விலாம்பிகை பி. ஏ. கருத்துரை வழங்குவார். (21)

# தனது சொந்த நாட்டிற்குள்ளேயே அதிக செலவுடன் போரிடும் அரசு

(மட்டக்களப்பு)

1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 11ஆம் திகதிக்குப் பின்பு இராணுவத்தினர் வட-கிழக்கு மாகாணத்தில் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அதிகமான அப்பாவி இளைஞர்கள் காணாமற் போன பகுதி மட்டக்களப்பு மாவட்டம் ஆகும். இங்கு இதுவரை ஆறாயிரத்திற்கும் அதிகமான அப்பாவி மக்கள் காணாமற் போயுள்ளனர் என மட்டக்களப்பு எம். பி. ஒருவர் தெரிவித்தார். வாழைச்சேனை விஷ்ணு ஆலய முன்றலில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முன்பு சர்வதேச மட்டத்தில் யாழ்ப்பாணம் மட்டுமே தெரியும். ஆனால் இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் கொக்கட்டிச் சோலை, வந்தாறுமூலை, மயிலியந்தனை ஆகிய கிராமங்கள் பல நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளன. இதற்குக் காரணம் இக் கிராமங்களில் இடம்பெற்ற படுகொலைகள் ஆகும்.

கொக்கட்டிச்சோலையில் 67 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் இக் கொலைகளுக்குப் பொறுப்பு இராணுவத்தினரே என ஜனாதிபதி விசாரணைக் கமிஷன் தீர்ப்பளித்தது வந்தாறுமூலை பல்கலைக்கழக அகதிமுகாமிலிருந்து 158 பேர் கைது செய்யப்பட்டனர். இராணுவமே இவர்களைக் கைது செய்தது அவர்கள் அனைவருமே கொல்லப்பட்டு விட்டதை பெயர்ப் பட்டியலோடு அரசுக்கு அறிவித்தேன் அன்று அரசு இதை மறுத்தது. ஆனால் சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் வெளியான நீதிபதி சொய்சா மனித உரிமைக் குழு கொலைகளுக்கு இராணுவமே பொறுப்பு என அதற்குப் பொறுப்பான படையினரின் பெயர்ப் பட்டியலையும் வெளியிட்டது.

மயிலியந்தனையில் இடம்பெற்ற 36 அப்பாவித் தமிழ் மக்கள் கொலைகளை விசாரித்த பொலநறுவை மாவட்ட நீதிபதி கொலைகளுக்குப் பொறுப்பான 21 படையின

அரசுகளால் தொடர்ந்து இழுத்தடிக்கப்படும் பிரச்சினை ஆனால் இப்பிரச்சினைக்கு இதுவரை அரசியல் தீர்வு காணாத அரசு இன்று வடகிழக்கு பிரச்சினையை இராணுவ ரீதியாகதீர்க்கலாம் என நடவடிக்கை எடுக்கிறது. நவீனயுத்த விமானங்களையும், டாங்கிகளையும், கடற்படை படகுகளையும் ரஷ்யா சீனா போன்ற நாடுகளிடமிருந்து பெறும் உடன்படிக்கைகளில் அரசு தற்போது கைச்சாத்திட்டுள்ளது.

எமது நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 40 சதவிகிதத்தை நேரடியாகவும் மறைமுகமாகவும் அரசு யுத்தத்திற்கென செலவு செய்கிறது இன்று ஆசிய உபகண்டத்தில் பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக அதிக தொகையை யுத்தத்திற்கு செலவிடும் நாடு இலங்கை.பாகிஸ்தான் வெளிநாட்டு சக்திகளுக்கு எதிராக போரிடவே அதிகபணம் செலவு செய்கின்றது ஆனால் சொந்த நாட்டிற்குள்ளேயே போரிட அதிகம் செலவிடுவது இலங்கை மட்டுமே.

இலங்கையின் மொத்த அரிசி உற்பத்தியில் 12 5 வீதத்தை அன்று மட்டக்களப்பு

சில பகுதிகளில் நெற்செய்கை செய்ய படையினர்தடைவிதித்துள்ளனர் அறுவடை செய்த நெல்லை சுதந்திரமாக கொண்டுவர முடியாது இதற்கும் பேர்மிட் வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணம் இப்பகுதியில் முற்றாக கொடுக்கப்படவில்லை. மீளக் குடியமர்வு தொகையான 2000ரூபா தொழில் இழப்புத் தொகையான 4000 ரூபா போன்ற நிவாரணங்களுக்கு மட்டக்களப்பு மாவட்டத்திற்கு தேவையான பணம் 24 கோடி ரூபாய்க்கு ஆனால் அரசோ இலங்கை முழுவதும் கொடுப்பதற்கு 20கோடிரூபா நிதியை வழங்கியுள்ளது.

வடகிழக்குப் போருக்கு அதிகபணம் செலவாவதால்இவற்றிற்குபணம் வழங்கபோதாது எனக் கூறப்படுகிறது எனவே தாம் நாம் கூறுகிறோம் இப்பேரை முடிவுக்கு கொண்டு வாருங்கள் என்று யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தி சமரச முயற்சியில் ஈடுபடுங்கள் என அரசை பலமுறை கேட்டுள்ளோம் இப்போரை முடிவுக்கு கொண்டுவரவேண்டும் அதன் பின் அரசு இதயசுத்தியுடன் சம்பந்தப்பட்ட பகுதியினருடன் பேச முன் வரவேண்டும்

# சிற்றூழியர் வெற்றிடங்கள் நிறுவனத் தலைவர் நிரப்பலாம்

(கொழும்பு)

அரசாங்கசேவை, மாகாண சேவை மற்றும் அரச கூட்டுத்தாபன பிரிவின் சிற்றூழியர் சேவகர்பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதை அமைச்சுக்களின் செயலாளர்கள் / நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைத்துள்ளதாக அரசாங்கநிர்வாகஅமைச்சு93-12-16 ஆம் திகதிய சுற்றறிக்கை மூலம் தெரிவித்துள்ளது

அதன் பிரகாரம் இணைந்த சேவையைச் சேர்ந்த அலுவலகப் பணியாளர் சேவையின் 3-ம் வகுப்பின் அலுவலகத் தொழிலாளி, தோட்டவேலையாட்கள், கட்டடந் துடைப்பவர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவை 3அ வகு

சேவைகள் பணிப்பாளரின் முன்னங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அனுமதிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை வெற்றிடங்கள் பற்றிய கடிதத்தின் பிரதியொன்றையும் கடிதத்துடன் இணைத்து இணைந்த சேவைகள் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

இத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பங்கள் கோரப்படும்போது 30/93-ம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கையின்படி அலுவலகப் பணியாளர் சேவை பிரமாணக் குறிப்பின் விதிகளுக்கு அமைவாக ஆள் சேர்க்கப்படல் வேண்டும்.

மேலும் அலுவலகத் தொழிலாளர்கள் தொடர்பில் செய்யப்படும் ஆட்சேர்ப்புகள் பதவியணி எண்ணிக்கையிலுள்ள வெற்றிடங்களுக்கேற்ப செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய நியமனங்கள் நிரந்தர அடிப்படையில் வழங்கப்படல் வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது

# நிதி அமைச்சின் ஆலோசகர்

வர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர் சேவை 3அ வகுப்பில் துப்புரவேற்பாட்டுத் தொழிலாளி வெற்றிடங்களை நிரப்புவதற்காக இணைந்த

## இன்றைய நிகழ்வு

வேலணை-ஊர்காவற்றுறை கோட்ட அதிபர்களுக்கான அவசரக் கூட்டம் சென் ஜோன்ஸ் அக்கடமியில் இன்று புதன் மாலை 3 மணிக்கு நடைபெறவுள்ளது என கோட்டக்கல்வி அதிகாரி தெரிவித்துள்ளார்.

# பதவி இராஜினாமா

## சுதந்திரக்கட்சியில் இணைவார்?

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் பதவி துறந்ததைத் தொடர்ந்து பொருளியல் துறையில் பிரபலமானவரான லக்ஷ்மன் ஆர். வட்டவலவும் தமது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

நிதி அமைச்சின் ஆலோசகராக பதவி வகித்த லக்ஷ்மன் ஆர். வட்டவல தம்மை சிறிலங்கா சுதந்திரக் கட்சி அழைக்குமானால் அக்கட்சியில் இணையத்தயாராக இருப்பதாக அறிவித்துள்ளார்.

முதலீட்டுசபையின் நிர்வாக இயக்குனராக இருந்த வட்டவல கடந்தவருடம் பலவந்தமாக நிதி அமைச்சின் ஆலோசகர் பதவிக்கு அரசினால் இடமாற்றம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர் முன்னதாக தோல்பொருள் கூட்டுத்தாபனம் கனிப்பொருள் அகழ்வு அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மக்கள்வங்கி ஆகியவற்றின் தலைவராகவும் செயற்பட்டு வந்தவராவார்.

நீதிபதி கொலைகளுக்குப் பொறுப்பான 21 படையினருக்கு எதிராக கொலை எத்தனிப்பு வழக்கு தொடர பணிப்புரை வழங்கியுள்ளார்' இவை யாவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை உலக நாடுகளுக்கு எடுத்துக் காட்டும் சம்பவங்களாகும்.

வடக்கு-கிழக்கு பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினை கடந்த 40ஆண்டு காலமாக தீர்க்கப்படாமல் பெரும்பான்மை

அரிசி உற்பத்தியில் 12 5 வீதத்தை அன்று மட்டக்களப்பு மாவட்டம் பெற்றுக் கொடுத்தது ஆனால் இன்று நமது சொந்த நிலத்தில் விவசாயம் செய்ய பேர்மிட்டுக்கு கையேந்தி நிற்க வேண்டிய நிலை. யூரியாஉரம் எடுத்துவர தடை

சம்பந்தப்பட்ட பகுதியினருடன் பேச முன்வரவேண்டும் யதார்த்த நிலையில் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதென்றால் புலிகளுடன் பேசியே இப்பிரச்சினையை தீர்க்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பி. கள் பதவி விலக வற்புறுத்து

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவிற்கு தேசியப் பட்டியல் மூலம் அமைச்சர் பதவி கிடைக்கச் செய்வதற்காக ஐ. தே. கவைச் சேர்ந்த சிலர் தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் சிலரை அணுகி அவர்களை இராஜினாமா செய்ய வற்புறுத்தி வருவதாக தேசியப்பட்டியல் எம், பிக்கள் சிலர் முறையீடு செய்துள்ளனர். இராஜினாமா செய்வதற்கு பணம் தரவும் இச்சக்திகள் முயல்வதாகவும் இந்த எம், பி.க்கள் கூறியுள்ளனர்,

சிலருக்கு பதவி விலகுவதற்கு சன்மானமாக 6 மில்லியன் ரூபாவும் வேறு சிலருக்கு 2 மில்லியன் ரூபாவும் வழங்க முன்வந்ததாகவும் சில தேசியப் பட்டியல் எம்- பி,களுக்கு அநாமதேய கொலை மிரட்டலும் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது,

இதேவேளை தாம் இராஜினாமா செய்யப் போவதாக வெளியான செய்திகள் உண்மையற்றவை; தவறானவை என ஐதே- க,வின் தேசியப் பட்டியல் உறுப்பினர்களில் ஒருவரான அலக் ரொபர்ட்சன் கூறியுள்ளார்

# காமினியைஎதிர்ப்பதானால் வெளியேறி விடலாம்

## சிறிசேன கூரேக்கு டி. பி. தெரிவிப்பு

(கொழும்பு)

காமினி திஸநாயக்காவிற்கு எம் பி பதவி வழங்க எதிர்ப்பு தெரிவிப்பதானால் கட்சியை விட்டு வெளியேறலாம் என ஜனாதிபதி விஜேதுங்கா ஐ தே க பொதுச் செயலர் சிறிசேனகூரேக்குஉத்தரவிட்டு விட்டதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இது தொடர்பாக காமினி திஸநாயக்கா வெளியிட்டுள்ள கருத்தில் நான் பாராளுமன்றம் செல்வேன் என்பதில் எதுவும் உறுதியாகதெரியவில்லை இது குறித்த முடிவு எடுக்கும் பொறுப்பை ஜனாதிபதியிடமும் அரசிடமும் விட்டு விட்டேன் என்றார்

# மேலதிக உணவுமுத்திரை நல்.பிர.செயலர்விநியோகம்

ஒக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான மேலதிக உணவு முத்திரை நல்லூர் பிரதேச செயலகத்தினால் கிராம அலுவலர்களிடம் 5-18 வயதிற்குட்பட்ட வறுமை நிவாரண உணவு முத்திரை பெறும் குடும்பங்கட்கு விநியோகிப்பதற்காக கொடுக்கப்பட்டுள்ளது- அம்முத்திரைகளை இற்றைவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் பெற்றுக் கொள்ளும் கடைசித் தினம் மே மாதம் 2ஆம் திகதி ஆகும்-

## கண்டெடுப்பு

அண்மையில் தங்கநகையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் க இலங்கைநாதன், ஆடியபாதம் வீதி, குடியேற்றத் திட்டம் கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்-

## நுவரேலியாவில் மே தினம்

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மேதினப்பேரணி இம்முறை நுவரெலியாவில் நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, சென் அன்ட்ரூஸ் ஹோட்டல் அருகில் காலை ஒன்பது மணியளவில் ஊர்வலம் ஆரம்பமாகி நுவரெலியா நகர தபால் கந்தோருக்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள மண்டபத்தில் கூட்டம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது,

# சுன்னாகம் இலங்கை வங்கி 50-வதுகடனை வழங்கியது

இலங்கைவங்கியினால்நடைமுறைப்படுத்தப்படும் சுய முயற்சிக் கடன் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை தனது ஐம்பதாவது கடனை அண்மையில் வைபவ ரீதியாக வழங்கியது. கிளை முகாமையாளர் எஸ் விக்னராசா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட முகாமையாளர் கே. கணேசமூர்த்தி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு 50-வது கடனை வழங்கினார்.

இலங்கை வங்கியின் சுன்னாகம் கிளை கடன்பகுதி உத்தியோகத்தர்கள் என். சிவரத்தினம், தா.ம.ஜெயகுலசூரியர் கடன் பெற்றவர் சார்பில் இ சிறீரங்கநாதன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

## காற்றாலை அமைப்பு

காற்றுமூலம் குறைந்த செலவில் நீர் இறைக்க வசதியாக காற்றாலை அமைக்கும் முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப் பகுதியினர் ஈடுபட்டுள்ளனர்.

### முல்லைத்தீவு மாவட்டத்தில்

# இரட்டைச் சூட்டடுப்பு பெருமளவில் கட்டப்படுகிறது

யாழ் மாவட்டத்தில் ஏற்கனவே பெருமளவில் மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ள இரட்டைச் சூட்டடுப்புக்களை முல்லை மாவட்டத்திலும் கட்டுவதில் தற்போது பெருமளவு மக்கள் ஆர்வம் காட்டி வருவதைத் தொடர்ந்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சக்திப்பகுதியினர் மாவட்டத்தில் கிராமிய உற்பத்திக் குழுக்களுடன் இணைந்து இவ் அடுப்புக் கட்டும் பணியை தீவிரப்படுத்தியுள்ளனர்

விறகுச் சிக்கனத்தை ஏற்படுத்தவும், வன வளங்களைப் பாதுகாக்கவும் என அறிமுகப்படுத்தப்பட்ட இச் சூட்டடுப்பினால் குறைந்த நேரத்தில் சமையல் செய்யக் கூடியதாக இருப்பதாலும். பாதுகாப்பானதாக இருப்பதாலும் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள மக்கள் தாமாகவே முன்வந்து தமது பெயர்களைப் பதிவு செய்து தமது வீடுகளில் இரட்டைச் சூட்டடுப்பைக் கட்டுவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சேவைநலன் பாராட்டு

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலராகவிருந்து இடமாற்றம் பெற்றுக் கோப்பாய் பிரதேச செயலராகச் சென்ற பிரதேச செயலர் திரு.க.கேதீஸ்வரனின் சேவையைப் பாராட்டி அம்பன் அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் திரு க. ஆனந்தமூர்த்தி தலைமையில் பாராட்டுவிழா வொன்று பொதுமக்களால் நடாத்தப்பட்டது. இவ்விழாவிலே யாழ் அரசாங்க அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்- பிரதேச செயலர் திரு-க- கனகரத்தினம் தமிழீழ படைத்துறைபயிற்சிக் கல்லூரி பொறுப்பாளர், திரு. மு. வே. யோ. வாஞ்சிநாதன், கடற்புலிகள் பொது நிர்வாக மக்கள் தொடர்பாளர் திரு, மறவன், வடமராட்சிகிழக்கு பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு வ, செல்வராசா உட்பட இன்னும் பலர் பாராட்டுரைகளை வழங்கினர்- (25)

## கலந்துரையாடல்

நாளை வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் சண்டிலிப்பாய் வட்டத்திற்குட்பட்ட பதிவு செய்த' பதிவு செய்யாத கழகங்களுக்கான கலந்துரையாடல் வட்ட விளையாட்டுத்துறை இணைப்பாளரின் தலைமையில் நடைபெறும்.

# கல்விச்சேவை சபையின் நடவடிக்கை தவறானது

(கொழும்பு)

மாகாணசபையின் கீழ்உள்ள பாடசாலைகளுக்காக மனையியல் விஞ்ஞான டிப்ளோமா ஆசிரியர்களை திரட்டுவதற்கான கல்விச் சேவைகள் சபையின் நடவடிக்கை அரசியலமைப்புக்கு முரணானது. அத்துடன் அதிகார வரம்பு மீறலாகும்.

இவ்வாறு மேல்மாகாண ஆளுநரின் செயலர் எம். இராசநாயகம் அரசசேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைச் சபையின் செயலர் ஏ. எஸ், வீரரத்னவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

சிங்கள மற்றும் தமிழ்மொழி மூல அரசாங்கப் பாடசாலைகளில் மனையியல், விஞ்ஞான டிப்ளோமா ஆசிரியர்களை நியமிக்க வர்த்தமானி மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பொதுச் சேவையின் கீழ்உள்ள பாடசாலைகளில் இந்த நியமனங்கள் வழங்கப்படும் என்று உங்களுடைய விளம்பரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது இந்த நியமனங்கள் நாட்டின் சகல மாவட்டங்களிலுமுள்ள தமிழ் மொழிமூல வெற்றிடங்களையும் உள்ளடக்குகிறது

வெற்றிடங்களுக்கும் அதிகமான எண்ணிக்கையில் விண்ணப்பதாரிகள் இருப்பின் கல்விச்சேவைச் சபையினால் நடத்தப்படும் பரீட்சை முடிவிற்கு ஏற்பவே தெரிவுகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த விவகாரம் குறித்து உங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவருமாறு மேல்மாகாணசபை ஆளுநர் என்னைப் பணித்துள்ளார் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

# பாடசாலை தளபாடங்களை பெற்றுக்கொள்ளகோரிக்கை

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சுக்குச் சொந்தமான தச்சுத்தொழிற்சாலையிலிருந்து பாடசாலைத் தளபாடங்களை வடக்கு - கிழக்கில் சில கல்வித் திணைக்கள அதிகாரிகள் எடுக்காதது குறித்து ஆளுநர் லயனல் பெர்னாண்டோ கவலை தெரிவித்துள்ளார்.

தளபாடங்களைத் தச்சுத் தொழிற்சாலையிலிருந்து தாமதியாது பொறுப்பேற்று அதற்குரிய கொடுப்பனவைச் செய்யும்படியும் அவர் அக்கல்வித் திணைக்கள அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

சுமார் ஒரு மில்லியன் ரூபா பெறுமதியான 5000 கதிரை மேசைகள் அதிகாரிகளினால் பொறுப்பேற்காமல் தொழிற்சாலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# வண்டி சவாரிப் போட்டியில் இப்படியும் கொடூரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அண்மையில் இடம்பெற்ற புதுவருட விளையாட்டு விழாவில் நடைபெற்ற மாட்டுவண்டி சவாரிப் போட்டியில் மாடு ஒன்று அதன் உரிமையாளரினால் கொடூரமாக நடத்தப்பட்டதினால் உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றது.

சவாரிப்போட்டியில் கலந்துகொண்ட இப்போட்டியாளர் வெற்றி பெறுவதற்காக அவர் வண்டியில் பூட்டப்பட்ட மாட்டின் மீது கத்தியால் குத்திக்கீறி இரத்தம் வழிந்த காயத்தின் மீது உப்பைத் தடவினார். இதனால் வெறிகொண்ட மாடு வேகமாக ஓடிவெற்றிக் கம்பத்தையும் முதலில் அடைந்தது. இப்போட்டியாளர் மாட்டின் காலிலும், தொடையிலும், பின்புறமும் பலமுறை கத்தியால் குத்தியதன் காரணமாக போட்டி நடைபெற்ற வீதியிலும் இரத்தத்துளிகள் காணப்பட்டன. வேதனை தாங்க முடியாத மாடு மரண ஓலத்துடன் ஓடி முதலிடத்தைப் பெற்றபோதிலும் இவர் வெற்றி குறித்து பலத்த ஆட்சேபனை எழுப்பப்பட்டதையடுத்து அவருக்கு முதற்பரிசு கொடுக்கப்படவில்லை

காயமடைந்த மாடும் மறுநாள் மிருகவைத்திய நிலையத்தில் உயிரிழந்தது.

# உழவு இயந்திரங்களை

# கொடுக்குமாறுக் கோரிக்கை

# கொடித் தோடை (பசன்) செய்கை முறை

**பசன் பழங்களின் முக்கியத்துவம்:**

பசன் பழமானது விற்றமின் 'C' நிறைந்தது. பழங்களை கரைத்து சாறாக உட்கொள்ளலாம். பசன் கொடியின் இளம் இலைகளை வறுத்து உண்ணலாம். இதுஒரு இலைக்கறி ஆகும். இருதய நோய் வராமல் பாதுகாப்பதற்கு பசன் இலை வறுவல் சிறந்ததென நம்பப்படுகிறது.

வர்க்கம்;-

மஞ்சள்நிற பழங்களைக் கொண்ட வர்க்கம் உலர்வலயத்திற்கு உகந்தது.

நடுகைப்பொருள்:-

விதை மூலமோ, தண்டுத் துண்டங்கள் மூலமோ நடுகைப் பொருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

நடுகை முறை:-

சாதாரண வரிசை முறையில் நடும்போது கிழக்கு மேற்காக வரிசைக் கிடையில் 2 மீற்றரும் வரிசையில் கொடிகளுக்கிடையே 4 மீற்றரும் இடைவெளி இருத்தல் வேண்டும். தூண்களை 4 மீற்றருக்கொன்றாக நடவேண்டும் தூண்களுக்குப் பதிலாக கிளிசீரீடியா சீமைக்கிழுவை தடியே போதுமானது. தூண்களுக்கிடையில் தொடுக்கப்படும் கம்பிகள் நிலத்திலிருந்து 5½'' - 6'' (1¾ மீற்றர்) உயரத்திலும் தூண்களின் உயரம் 2¼ மீற்றரும் இருக்கலாம். தொடுக்கப்படும் கம்பி இரும்புக்கம்பி அல்லது முட்கம்பியாக இருக்கலாம்.

வீட்டுத் தோட்டத்தில் சாதாரண வேலிகளிலும் மா போன்ற மரங்களிலும் இதனை படரவிடலாம்: வேலி ளில் 4 - 5 மீற்றருக்கொன்றாக கொடிகளை நாட்டலாம்.

நடுகைக்குழி தயாரித்தல்:

2 1/2' நீளம் 2' அகலம் 2' ஆழமான குழிகளை வெட்டி மேல்மண், உக்கிய மாட்டெரு, சிபார்சு செய்யப்பட்ட உரக் கலவை ஆகியன கலந்து குழிகளை நிரப்பலாம்.

தேவையான உரப்பசளை:-

14:21;14 கலவை குழியொன்று க்கு 225g வீதம் இட்டு மண்ணுடன் நன்கு கலந்துவிடல் வேண்டும்.

கொடி வளர்ச்சி குன்றி காணப்படின் நட்டு 2-வது மாதம் கொடியொன்றிற்கு 225g வீதம் இடவும் 6 மாதத்தின் பின் மீண்டும் 225g வீதம் இடவும். இதன் பின்பு பின்வரும் முறையில் பசளை இடவும்.

| | | | |
|---|---|---|---|
| 2-வது வருடம் | கொடியொன்றுக்கு | 450g(மேற்கூறிய கலவை) | |
| 3-வது வருடம் | ,, | ,, 675g | ,, |
| 4-வது வருடம் | ,, | ,, 900g | ,, |

இக்கலவையை பெற்றுக் கொள்வதற்கு பின்வரும் அளவுகளில் நேரடிப் பசளையை கலக்கவும். கலந்து 225g 14: 21' 14 கலவையை பெற்றுக் கொள்ளலாம்.

பசளையிடும் போது கொடியின் அடியிலிருந்து 1' - 1 1/2' தூரத்தில் பசளையை வட்டமாக இட்டு மண்ணுடன் நன்கு கலந்துவிடவும். பசளையிட்ட பின்பு நன்கு நீரூற்றுதல் அவசியம்.

கத்தரித்தலும் படரப் பழக்குதலும்:-

கொடிக்கு அருகாமையில் சிறிய தடியொன்றை நட்டு அதனையும் மேலுள்ள கிடையான கம்பியையும் கயிறு ஒன்றினால் இணைத்து அக் கயிற்றின் வழியே கொடியை படரவிடலாம். கொடியானது கம்பி மட்டத்திற்கு வந்ததும் வளரும் முனையானது கிள்ளி அகற்றப்படல் வேண்டும். அதிலிருந்து உண்டாகும் கிளைகளில் இரண்டை மட்டும் இரண்டு பக்கங்களிலும் ஒவ்வொன்றாக படரவிடல்வேண்டும் நிலமட்டத்திலிருந்து கம்பி மட்டம்வரையான ஏனைய கிளைகள் கத்தரிக்கப்படல் வேண்டும். பல கிளைகள் உருவாகி ஒன்றுடனொன்று பின்னப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். இரு பக்க கிளைகளிலிருந்தும் கீழ் நோக்கி வளரும் கிளைகள் 20cm நீளம் வரைவிட்டு கத்தரிக்கலாம்.

பூச்சி புழு நோய்:- பூச்சி புழு நோய்த் தாக்கங்கள் பொதுவாக குறைவு இருப்பினும் சில வேளைகளில் இளந்தளிர் மஞ்சள் நிறமடைந்து இலைகளின் நரம்புகள் சுருங்கி விளிம்பு மேல் நோக்கி சுருள்தல் அவதானிக்கலாம். இது ஒரு வைரசு நோயாதலால் இந்நோய் வராமல் தடுப்பது அவசியம். இதற்கு சிறந்த பர மரிப்பு சிபார்சு செய்யப்பட்ட உரப்பசளை இடல்போன்றவற்றின் மூலம் கொடிகளை வீரியமாக வளரச் செய்து இந்நோய் ஏற்படாமல் தடுக்கலாம். இவ்வாறு நோய் அறிகுறிதென்படின் உடனே கொடியை பிடுங்கி அழித்தல் அவசியம். இதன் மூலம் ஏனைய கொடிகளுக்கு இந்நோய் பரவுவது தடுக்கப்படும்.

செயற்கை முறை மகரந்தச் சேர்க்கை மூலம் காய்த்தலை தூண்டல்:-

கொடி சுமார் 7-8 மாதங்களில் பூக்கத் தொடங்கும். இதில் அதிகளவு பழங்களைப் பெறுவதற்கு கையால் மகரந்தச் சேர்க்கை செய்தல் அவசியம். மகரந்தச் சேர்க்கை செய்வதற்கு உகந்த நேரம் பிற்பகல் 1 மணி — 6 மணி வரை. இந்நேரம் பூக்கள் மலர்ந்து இருக்கும். இந்நேரம் தூரிகையினால் அல்லது கைவிரலினால் ஒரு பூவிலிருக்கும் மகரந்தத்தை இன்னொரு பூவின் குறிக்கு மாற்றீடு செய்தல் வேண்டும் சில சமயங்களில் கொடி தன் மகரந்தச் சேர்க்கை குணாதிசயம் அற்றதாக காணப்படலாம் எனவே அவ்வாறான கொடியிலுள்ள பூக்கள் இன்னொரு கொடியிலுள்ள பூக்களின் மகரந்தங்களினாலேயே மகரந்தச் சேர்க்கைக்குட்படுத்தப்படல் வேண்டும் எனவே எப்போதும் இரண்டு கொடிகளை நாட்டுதல் அதிக பயனைத் தரவல்லது. மகரந்தச் சேர்க்கையின் பின் குறைந்தது 2 மணி நேர உலர்காலம் இருப்பது பழவிருத்திக்கு மிகவும் அவசியம். பசன் கொடி இருக்குமிடங்களில் தேனீக்களின் நடமாட்டம் இருப்பது மகரந்தச் சேர்க்கையை கூட்டி காய்த்தலை தூண்டும் எனவே பெரியளவில் இச்செய்கை பண்ணப்படும் இடங்களில் தேனீ வளர்ப்பு செய்தல் அதிகளவு பயனை தரவல்

# சோலைக்கிராம அபிவிருத்தி கண்காணிக்க குழு அமைப்பு

சோலைக் கிராமத்தை அனைத்து வளங்களையும் பயன்படுத்தி பொருண்மிய அபிவிருத்தியை மேற்கொள்ளும் முன்னோடித் திட்டத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் 1993 ஆம் ஆண்டிலிருந்து ஈடுபட்டு வருகின்றது.

நடப்பு ஆண்டிற்கானதிட்டமிடலை மேற்கொள்வதற்காகவும் 1994ஆம் ஆண்டு சிறுபோக பயிர்ச்செய்கையின் நடவடிக்கைகளை நெறிப்படுத்துவதற்காகவும் இத்திட்டத்தில் ஈடுபட்டுள்ள அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் பல்கலைக்கழகத் துறை சார் தலைவர்களும், பல்கலைக்கழக மாணவர்களும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பிரதிநிதிகளுடன் திட்டக்கிரமத்தை 18-03-94 -ல் பார்வையிட்டதுடன் சோலைப் பாடசாலையில் நடைபெற்ற கலந்துரையாடலிலும் அனைவரும் கலந்துகொண்டனர் இக்கலந்துரையாடலில் தலைமை வகித்த தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதிநிதி படிப்படியாக மக்கள் கிராமக் குடியிருப்பிலிருந்து வெளியேறுவதனால் கிராமத்தின் அபிவிருத்தி பெருமளவில் பின்னடைந்து போகின்றது என்று குறிப்பிட்டார் இக்கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்காக காணிகளை விட்டு வெளியேறியவர்கள் உடனடியாக தமது காணிகளுக்குத் திரும்பி வந்து கிராமத்தை அபிவிருத்தி செய்ய ஒத்துழைப்பு நல்க வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார் கிராமத்தின் அபிவிருத்தியை கண்காணிப்பதற்காக கண்காணிப்புக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதையும் அறிவித்தார்

1994-ம்ஆண்டுகிராமத்தின் ஒட்டுமொத்தமான அபிவிருத்தித் திட்டமானது விவசாய வழி நடத்தற் குழுவில் அமைக்கப்படவுள்ள 05 பேர் கொண்ட குழுவினால் வகுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது 94 ம் ஆண்டின் சிறுபோக பயிர்ச்செய்கைதொடர்பாகவிவசாயிகள் நிறைவேற்ற வேண்டிய தத்தமது கடமைகளை உரிய காலங்களில் நிறைவேற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் தலைவர் இறுதியாக முன்வைத்தார்.

இதனைத் தொடர்ந்து உரையாற்றிய அரச, அரச சார்பற்ற, பல்கலைக்கழக பிரதிநிதிகள் ''நீர் முகாமைத்துவத்தின் முக்கியத்துவத்தை விளக்கி நீரைச் சேகரிப்பதற்கும் உச்சப் பயன்பாட்டைப் பெறுவதற்கும் விவசாயிகளை ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொண்டதுடன் பின்தங்கிய மேற்படி கிராமத்தின் ஒட்டுமொத்தமான அபிவிருத்தியில் பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை வலியுறுத்தினர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் தமது உரையில் 93/94ஆம் ஆண்டு காலபோக பயிர்ச் செய்கைக்கு கடனாக வழங்கப்பட்ட உள்ளீட்டு உதவிகளை விவசாயிகள் மீளச் செலுத்தி வருவதை வரவேற்று சிறுபோகச் செய்கைக்கும் தம்மாலான உதவிகளை வழங்கவுள்ளதாக உறுதியளித்தனர்

# 6ம் ஆண்டு நினைவு



தமிழீழ மண்ணில்

03.05.1962

தமிழீழ மண்ணில்

27.04.1988

## கப்டன் மோகன் மாஸ்டர்

(முருகேசு ஜெயக்குமார்)

(முன்னாள் நெல்லியடி பிரதேசப் பொறுப்பாளர்)

ஈழம் மீட்க எழுந்த புயலே! புலியே!

எங்கும் களமாடி எதிரி தினம் பிணமாக வென்றாய்

## உழவு இயந்திரங்களை கொடுத்துதவக் கோரிக்கை

மேதின ஊர்வலத்தில் பங்கு கொள்ளும் பொது நிறுவனங்கள் தாம் மேற்கொள்ளவுள்ள ஊர் திப்பவனி நிகழ்வுகளுக்கு உழவு இயந்திரங்களையோ அல்லது இரு சில்லு உழவு இயந்திரங்களையோ பாவிக்கும் பொருட்டு உதவி கோருமிடத்து தங்கள் வாகனங்களை கொடுத்துதவி மேதின ஊர்வலம் சிறப்புற பேருதவி புரியுமாறு யாழ் மாவட்ட தனியார் போக்குவரத்து பகுதியினர் கேட்டுள்ளனர்.

## உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்வேன்

**- அமைச்சர் தொண்டமான்**

(கொழும்பு)

இலங்கையில் உல்லாசப் பிரயாணத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தனது அமைச்சு சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக உல்லாசப் பயணத்துறை கிராமிய தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் எஸ் தொண்டமான் தெரிவித்தார்.

பண்டாரவளையில் உல்லாசப் பயணத்துறை தொடர்பான பொருட்காட்சி ஒன்றைத் திறந்து வைத்த பின் அமைச்சர் தொண்டமான் உரையாற்றினார். உல்லாசப் பயணத்துறையை அபிவிருத்தி செய்வதே எமது அமைச்சின் நோக்கமாகும். சிங்கப்பூர், மலேசியாபோன்ற நாடுகளில் உல்லாசப்பயணத்துறை முன்னேறியுள்ளது நாமும் திட்டமிட்டு செயற்பட்டால் முன்னேற முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## மூன்றாவது பிறந்தின வாழ்த்து

### செல்வி டயானா

### 27-04-94

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த பாஸ்கரன் றஞ்சி தம்பதிகளின் செல்வப் புதல்வி டயானா தனது மூன்றாவது பிறந்தநாளை 27-04-94 அன்று தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார். டயானாவை அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, வவா அன்ரா, சரா அன்ரா, ஜெயந்தி அன்ரா, சதீசன் மாமா, பிரதீபன்மாமா, சித்திஅம்மா குடும்பத்தினர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் சோலை அம்மன் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

**- குடும்பத்தினர்**

(8111)

பின்வரும் அளவுகளில் நேரடிப் பசளையை கலக்கவும். கலந்து 225g 14: 21' 14 கலவையை பெற்றுக் கொள்ளலாம்.

அமோனியம் சல்பேற்று 110g
அடர் சுப்பர் பொசுபேற்று 75g
மியூறியேற் ஒவ் பொட்டாசு 40g

தலை தூண்டும் எனவே பெரியளவில் இச்செய்கை பண்ணப்படும் இடங்களில் தேனீ வளர்ப்பு செய்தல் அதிகளவு பயனை தரவல்லது.

நன்றி:- ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட்

## ஹேமா பிரேமதாசா டி.பியை சென்று சந்தித்தார்

காலஞ்சென்ற ஜனாதிபதி பிரேமதாசாவின் மனைவியார் ஹேமாபிரேமதாசா கடந்த வியாழனன்று ஜனாதிபதி மாளிகைக்கு சென்று ஜனாதிபதி விஜேதுங்காவை சந்தித்து பேச்சு நடத்தினர்-

விஜேதுங்காவுடன் சிநேகபூர்வ பேச்சுவார்த்தைகளை நடாத்தியதாக திருமதி ஹேமா பிரேமதாசா தெரிவித்தார். ஜனாதிபதி மாளிகையில் நான் நான்கு வருடங்கள் வசித்தேன் அங்கு சென்றதும் எனக்கு மகிழ்வை தந்தது என அவர் கூறினார்.

## தேசிய பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்கள்

வடக்கு-கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் உள்ள தேசிய பாடசாலைகளில் ஆசிரிய வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை கல்விச் சேவை சபை கோரியுள்ளது.

தற்போது சேவையில் உள்ள ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய அப்பாடசாலைகளில் நியமிக்கப்படுவர்,

## மொட்டைக் கடிதங்களால் மாத்தளையில் பலர் அவதி

(கொழும்பு)

மாத்தளை நகரில் உள்ள மொட்டைக் கடிதப்பேர்வழிகளால் மாத்தளைக்கு வரும் வெளி மாவட்ட தமிழ் மக்கள் பொலிசாரின் விசாரணைக்கு உள்ளாக நேரிடுவதுடன் பல்வேறு சிரமங்களையும் அனுபவிக்க நேருகின்றது.

தமிழ் மக்களின் வீடுகளில் நடைபெறும் வைபவங்களில் கலந்து கொள்ள வரும் வெளியார் பற்றிய தகவல்களை உடனுக்குடன் பொலிசாருக்கு கொடுத்து விடுவதால் அப்பாவிகள் பலரும் தொல்லைக்கு உள்ளாக நேருகின்றது.

இவ்வாறான நிலையில் பொலிசாரால் அழைத்துச் செல்லப்படும் பலர் சில நாட்களாக தடுத்து வைக்கப்பட்டபின் விடுவிக்கப்படும் போதும் மற்றும் சிலர் வாரக்கணக்காக தடுத்து வைக்கப்படுவதும்குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டு

பருத்தித்துறை சுப்பர் மடம் சித்திவிநாயகர் பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 29ஆம் திகதி சித்தி விநாயகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றது.

(முன்னாள் நெல்லியடி பிரதேசப் பொறுப்பாளர்)

ஈழம் மீட்க எழுந்த புயலே! புலியே!
எங்கும் களமாடி எதிரி தினம் பிணமாக வென்றாய்
எதிரிபடை நீறாக நீ இங்கு களமாடி நிற்கையிலே...!
உப்புவெளியிலே வெடித்த பூகம்பத்தில்...!
உன்னையே அணைத்த மாவீரப் புலியே!
உன் முழக்கங்கள் எம்மை வழிப்படுத்த...
உன் பாசறை நோக்கி எம் பாதங்கள்
திசைப்படுகின்றன...!


மோகன் மாஸ்டர் வீதி,
சோழங்கன்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

**- குடும்பத்தினர்**

(8120)

**8ம் ஆண்டு** **28-ம் மாத**

## நினைவலைகள்





| கடற்புலி | | சிறப்புப் படைப்பிரிவின் சிறப்புத் தளபதி | |
|---|---|---|---|
| **லெப். தெய்வா** | | **லெப். கேணல் ராஜன்** | |
| **(ஐயாத்துரை சிவநாதன்)** | | **(சோமசுந்தரம் சற்குணம்)** | |
| பிறப்பு | வீரச்சாவு | பிறப்பு | வீரச்சாவு |
| 18.10.1964 | 27.04.1986 | 14.02.1966 | 27.08.1992 |

மாதகல் மண் அளித்த ஒப்பற்ற வீரர்களே!
தமிழீழத் தாயின் விலங்கொடிக்க வீறுகொண்டெழுந்த மறவர்களே
விடுதலைப் போரில் தம் உயிரை அர்ப்பணித்த வேங்கைகளே
உங்கள் வீர வரலாறு ''மாணிக்கக் கல்வெட்டு'' ஆகட்டும்.

இவர்களுடன் வீரச்சாவை அணைத்துக் கொண்ட மாவீரர்களுக்கும் வீர அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

மாதகல் துறை,
மாதகல். (8134)

**- தெய்வா படிப்பகத்தினர்**

யாழ்ப்பாணம்

**சிந்தனைக்கு**

அருமை உடைத்தென்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

— திருக்குறள்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-04-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

## மன வலிமை எதையும் எதிர்கொள்ளக்கூடியது

வடபகுதியின் மீது குறிப்பாக யாழ் குடா நாட்டின் மீதான தாக்குதலுக்கென சிறீலங்கா இராணுவம் தயாரித்துள்ள தாக்குதல் திட்டமானது மிகவும் பிரமாண்டமானது எனத் தற்பொழுது வெளிவந்து கொண்டிருக்கும் தகவல்கள் உறுதிப்படுத்து கின்றன. இதற்கென சுமார் 60,000 இராணுவத்தினரை வடக்கில் சிறிலங்கா அரசு குவித்திருந்தது. அதேசமயம், பொலிஸார், ஊர்காவற்படையென மேலும் பல்லாயிரம் ஆயுதபாணிகளும் தயார் நிலையில் இருந்தனர்.

இதேசமயம், பல கனரக ஆயுதங்களையும் சிறிலங்கா இராணுவம் கொள்வனவு செய்திருந்தது. இவ்வருட ஆரம்பத்தில் சுமார் 1000 கோடி ரூபா பெறுமதியான ஆயுதத்தை சிறிலங்கா அரசு கொள்வனவு செய்யத் தயாராக இருந்தது. இதில் சுமார் 500 கோடி ரூபா ஆயுதம் ஏற்கனவே கொழும்பு வந்து சேர்ந்து விட்டன. அத்தோடு, அவற்றில் பெரும்பகுதி வடக்கிற்கு அனுப்பப்பட்டும் விட்டன.

இந்நிலையில் யுத்தம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்குமானால் வடக்கில் பெரும் உயிர் மற்றும் உடைமை அழிவுகள் ஏற்பட்டிருக்கும். இது தவிர்க்க முடியாத ஒன்றாக நிகழ்ந்தே இருக்கும்.

ஆனால், இப்படுகொலைகளை தென் மாகாண சபைத் தேர்தல் தோல்வியானது தற்காலிகமாகத் தடுத்து நிறுத்தியது எனக் கூறுதல் மிகையாகாது. தென் மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறுவது நிச்சயம் எனவும், அவ் வெற்றியின் பின்னர், பாரிய தாக்குதலுக்கு மக்கள் அனுமதி அளித்து விட்டார்கள் எனக் கூறிக் கொண்டு தாக்குதலை ஆரம்பிக்க இராணுவத்திற்கு அனுமதி வழங்குதலே டி. பி. விஜேதுங்காவின் திட்டமாகவும் இருந்தது.

டி. பி. விஜேதுங்காவின் இந்நிலைப்பாடானது, அவரின் இன வெறியை வெளிப்படுத்துவதற்கான சிறந்த உதாரணமாகும். ஆயிரக்கணக்கான தமிழ்மக்களைப் பலியிட்டாயினும் தமிழர் தாயக நிலப்பரப்பை ஆக்கிரமிக்க வேண்டும். தமிழர் தேசியத்தை சிதைக்க வேண்டும், சிங்களப் பேரினவாதத்தை நிலைநிறுத்த வேண்டும் என்பது அவரது குறிக்கோளாகும்.

ஆனால், இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு ஒன்று எத்தகைய சாத்தியமாகும் என்பதைப் பற்றி அவர் எள்ளளவிலும் சிந்தனையைக் கொண்டிருக்கவில்லை. ஒரு தேசிய இனத்தின் விடுதலைக்கான

# மேற்குலகம் பிரசவித்து வரும் இரத்த வெறி கொண்ட மனித ஓநாய்கள்

மேற்குலக வாழ்க்கை முறையின் விபரீதமான, திகிலூட்டக்கூடிய இன்னொரு பக்கம் பற்றிய தகவல்கள் அண்மைக்காலமாக அதிகமாகவே வெளிவரத் தொடங்குகின்றன. மிகக் கொடிய முறையில்-ஆனால் மிக அமைதியாக பொழுதுபோக்காக செய்வது போல் தொடராக கொலைகளைச் செய்யும் தனி நபர்கள் அதிகரிப்பது ஒருபுறம், மறுபுறமோ இத்தகைய கொலைகளைச் செய்வோர்பற்றி, அவர்களது கொலை முறைமைகள், அதன் பின்னணிகள் பற்றி மிக விரிவான தகவல்களை பரபரப்பூட்டும் வகையில் புத்தகவடிவமாக, காட்டூன் எனப்படும் கோட்டு சித்திரவடிவமாக, திரைப்படமாக உடனுக்குடன் வெளியிட்டு பெருமளவில் சம்பாதிக்கும் வணிக நிறுவனங்கள் ஈசல்போல பெருகி வருகின்றன. சில விடங்களில் இத்தகைய விசித்திர கொலைகாரர் பற்றிய செய்திகளை உடனுக்குடன் கொடுக்க தொலைபேசி சேவைகளும் நடாத்தப்படுகின்றனவாம். இவற்றின் விளைவாக தமிழ் நாட்டு இரசிகர் மன்றங்கள்போல இத்தகைய கொலைகாரர்கட்கு ஆதரவாக அவர்கள் தமது விருப்பத்திற்குரியவர்களாக தேர்வு செய்து அவர்கள் பெயர்களில் தலையணிகள் சூடுவோரும், மேலங்கிகள் அணிவோருமாக இவர்களை நவீன கதாநாயகர்களாக்கும் விசித்திர போக்கும் மேற்குலகில் இப்போது வளர்ந்துவரும் செயற்பாடாகின்றது. இவை எல்லாம் மேற்குலகில் என்ன நடக்கின்றது என்கிற கேள்வியை இயல்பாகவே எழுப்புகின்றன.

இப்போது வெளியிடப்படும் சில புள்ளிவிபரங்களைப் பாருங்கள். குறிப்பாக இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் தொடர் கொலைகள் செய்யும் மனோ விகாரம் பிடித்தோர் தொகை அதிகரிப்பதாக கூறப்படுகின்றது. குறிப்பாக இத்தகைய தொடர் கொலைகள் ஓர் அமெரிக்க குணாம்சமாகவே பெருமளவில் உள்ளது. கடந்த 20 வருடங்களுக்குள் அடையாளம் காணப்பட்ட அல்லது கைதாக்கப்பட்ட இவ்வாறான தொடர்கொலைகளைப் புரிந்தோராக கருதப்படும் 160 க்கு மேற்பட்டோரில் 75 விழுக்காட்டினர் அமெரிக்கரே ஆவர். 1960 களில் ஆண்டுக்கு பத்தாயிரம் பேர்வரை கொலை செய்யப்பட்ட அமெரிக்காவில் இன்று ஆண்டிற்கு 25,000 மாக இத்தொகை அதிகரித்துள்ளதாகப் புள்ளிவிபரமொன்று தெரிவிக்கிறது. இங்கிலாந்திலோ குறிப்பிட்ட ஒருவேளையில் எப்போதுமே பெருந்தொகையானோர் காணாமல் போவோர் பட்டியலில் இடம்பெறுவதாகவும் இவர்களில் பலர் திரும்பவும் காணப்பட்டாலும் சிலர் இறுதிவரை காணப்படாமலே அதற்குரிய காரணங்களும் இறுதிவரை கண்டுபிடிக்கப்படாமலே போய் விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இங்குள்ள வியப்பு என்னவென்றால் மேற்குலகில் திடீரெனவெறிபிடித்தால் போல பகிரங்க இடங்களில் பலரையும் சுட்டுக்கொல்வோர் ஒரு புறமிருக்க; இத்தொடர் கொலைகாரர்களோ 10,15 வருடங்களுக்கு மேலாக பல கொலைகளைச் செய்து கொண்டு வெளித்தோற்றத்திற்கு மிக அமைதியாக நல்ல குடிமக்கள் போல வாழ்வதுதான். அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் மிக அண்மையில் இத்தகைய சிலர் கண்டுபிடிக்கப்பட்டமை பெரும் அதிர்ச்சியை உருவாக்கி இந்நாடுகளை ஒரு குலுக்கு குலுக்கிவிட்டன. இப்போது அமெரிக்காவில் மிக பரபரப்பாக பேசப்படும் கடந்த இரு வருடங்களாக ஆகக் குறைந்தது 10 பெண்களையாவது கொலை செய்த வலேஸ், கடந்த 15வருடமாக 15க்கு மேற்பட்ட படுகொலைகளைச் செய்து அவர்களின் எச்சங்களைத் தனது வதிவிடத்தில் புதைத்து வைத்த பிராங் பொட்ஸ் என்பவர்கள் சில உதாரணங்கள். இங்கிலாந்திலோ குளோசெஸ்டர் நகருக்கு அண்மையில் பிரெட்ரிக் வெஸ்ட் என்பவரின் வீட்டின் கீழ் புதைக்கப்பட்ட 16 பேருக்கு மேற்பட்டோரின் எச்சங்கள் காணப்பட்டமை இங்கிலாந்திலோ பெரும் குழப்பத்தையே ஏற்படுத்திவிட்டது. வெஸ்ட் செய்த கொலைகட்குள் 20 வருடங்கட்கு முன் காணாமல் போய் விட்டதாக இதுவரை கருதப்பட்ட அவரது முதல் மனைவியும், மகளும் பின்னர் 1987இல் காணாமல் போய் விட்டதாகக் கருதப்பட்ட 17 வயதான இன்னொரு மகள், அவர் நடாத்தி வந்த விடுதியில் தங்கிய கர்ப்பிணித் தாயொருத்தி என்போரும் உள்ளடங்குவதாக இப்போது சந்தேகிக்கப்படுகின்றது இக்கொலைகள் பற்றிய தகவல்கள் வெளிவந்தபின் இதுவரை காணாமல் போய் விட்டதாகக் கருதப்படும் பலருக்கும் இத்தகைய கதியே நேர்ந்திருக்கலாம் என்கிற அச்சம் இப்போது இங்கிலாந்தில் கிளர்ந்தெழுந்துள்ளது. இதன் விளைவாக இங்கிலாந்திலே போக்லாந்து போரின் போது பயன்படுத்தப்பட்ட நிலப்பகுதிகளில் கண்ணிவெடி தேடுதலுக்குப் பயன்படுத்தும் நவீன கருவியைப் பயன்படுத்தி வெஸ்டின் வீட்டுப்பகுதி இப்போது அங்குலம் அங்குலமாகத் தேடப்படுகின்றது.

இப்போது மேற்குலக சமூகத்தினரைப் பிடித்துள்ள மனநோயின் வெளிப்பாடுகளே இவை எனச் சமூகவியலாளர் கவலை தெரிவிக்கின்றனர். மேற்குலக சமூகம் தன்னையொரு மீளாய்விற்கு மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய தேவை தோற்றம் பெறுவதாக இவர்கள் கருதுகின்றனர். இவைகள் பற்றி ஆய்வு செய்வோர் பற்பல முடிவுகட்கு இப்போது வருகின்றனர். வெகு வேகமான எந்திரமயமான சமூகத்தின் போக்கிற்கு ஈடுகொடுக்க முடியாமல் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் தோல்வியைச் சந்தித்தவர்கள், இளவயதிலே பெற்றோர்களின் அரவணைப்பை இழந்தவர்கள், சிதைவுறும் குடும்பச் சூழல்களால் பாதிப்புற்றோர், விகாரம் பிடித்த சமூகத்தின் உறுப்பினரால் பாலியல் வன்முறைகட்கு இளவயதிலே பலிக்கடாவானோர் எனப் பொதுவாகவே இளவயதினர் பக்குவமாக வளரக்கூடிய சூழல் அற்றுப்பேவதே அடிப்படைக் காரணமாக இவர்கள் கூறுகின்றனர் அமெரிக்க சிறார்களின் இளமைப் பருவம் திருடப்பட்டு விட்டதாக இன்னொரு ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

இவற்றைவிட இக்கொலைகளைச் செய்வோர் பெறும் விளம்பரமும் இவர்களைக் கிளர்ச்சியுறச் செய்வதாக, பெரும் சாதனை படைப்போராக தம்மை பெரும் கதாநாயகர்களாக உருவகப்படுத்தி பெருமிதம் அடைய வழிவகுப்பதாகவும் கூறப்படுகிறது. ஏனெனில் அமெரிக்காவில் இத்தகைய தொடர் கொலைகளைச் செய்து கைதாகிய பலரும் தாம் நூற்றுக்கணக்கில் கொலை செய்ததாக மற்றவரை விட தாமே அதிகம் செய்ததாகப் பெருமையடித்துக் கொள்கின்றார்கள் தமக்கும் விசிறிகள், நண்பர்கள் இருப்பதும் தாம் என்றும் நினைவு கூரத்தக்கவர்கள் என்றும் இவர்கள் வேறு தம்மை உருவகப்படுத்திக் கொள்கின்றனர்: இத்தகைய மனநிலைக்கு எதையுமே ஏன் கொலைகள் வன்முறைகளையுமே மனிதமாக்கி பொருளீட்டும் மேற்கத்தைய பொருண்மிய முறையும் ஆய்வாளர்களால் கண்டிக்கப்படுகின்றன.

ஏனென்றால் இப்போது அமெரிக்காவில் மக்கள் தொலைக்காட்சியில் அதிகம் விரும்பிப் பார்க்கும் நிகழ்ச்சி இத்தகைய கொலைகளைச் செய்தோர்களுடனான செவ்விகளாகும். 17 பேரை கொன்று அவர்கள் உடல்களைத் துண்டு துண்டாக்கி இவர்களின் சில உடலுறுப்புக்களை குளிர் சாதனப் பெட்டியில் ஞாபகச் சின்னமாக பேணிவந்த ஜெப்ரி டமிர் என்பவரின் பெயரிலான ரீ சேட்டுக்களே இன்று அமெரிக்காவில் அதிகம் விற்பனையாகின்றன. தொலைபேசியில் இத்தகையோரின் குரலைக் கேட்கவும் உரையாடவும் பெருமளவு கட்டணம் செலுத்தினால் அங்கு சாத்தியப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது:

இப்போது சமூகவியலாளர் மேற்குலகச் சமூகமே இத்தகையோரைப் பிரசவிப்பதாக ஏற்றுக் கொள்கின்றனர். ''தமது சமூகமே இத்தகைய தொடர் கொலைகாரரின் பிறப்புக்களமாக தமது விசித்திர ஆவல்களினால் அவர்களை மேலும் ஊக்குவிக்கும் காரணியாகவும் உள்ளது.'' என இவர்களில் ஒருவர் குறிப்பிட்டார். இப்போது மேற்குலகில் குடும்ப விழுமியங்கள் பற்றி போதிக்க வன்முறைப் படங்களைத் தடுக்க, துப்பாக்கிகள் எளிதில் கிடைப்பதை இல்லாதொழிக்க பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே அரசியல் மேலாதிக்கமும், அறிவியல் உச்ச வளர்ச்சியும் நவநாகரிகத்தின் இருப்பிடமாக இருந்தாலும் மனிதநேயம் பிறழ்ந்தால் என்ன நடக்கும் என்பது இத்தகைய வளர்ச்சியை விரும்பும் பிறர்க்கும் ஒருபட்டறிவாக அமையும். இவ்வருடத்தை குடும்ப ஆண்டாக ஐ. நா. பிரகடனப்படுத்தியிருப்பதில் பொதிந்துள்ள உண்மை புலப்படுகின்றது அல்லவா?

- பாலகுமாரன்

# ஆயுத விற்பனை வீழ்ச்சியைத் தடுக்க ரஷ்யா தீவிரமான முயற்சி

### அமெரிக்கா பாக். கூட்டுப் பயிற்சி

பாகிஸ்தானும் அமெரிக்காவும் படையினருக்கான மென்ரக பயிற்சித் திட்டமொன்றைக் கூட்டாக இவ் வருடத்திற்குள் மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகவும் இப்

தல்களும் ஒருபோதும் தோற்கடித்து விட முடியாது என்ற வரலாற்றுப் பாடத்தை அவர் கவனிக்கவே இல்லை

ஒரு தேசத்தின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ ரீதியாக அடக்கி விட முடியாது என்பதற்கு வியட்னாமில் இருந்து ஆப்கானிஸ்தான் மற்றும் எரித்தியா வரை உதாரணங்கள் மலிந்தே உள்ளன. அதாவது, இராணுவத்தின் எண்ணிக்கையும், ஆயுத பலமும் போராட்டங்களை நிர்ணயித்து விட முடியாது. அவ்வாறு நிர்ணயித்திருப்பின் வியட்னாம் சுதந்திரம் பெற்றிருக்கவோ, அன்றி ஆப்கானில் இருந்து சோவியத் வெளியேறியிருக்கவோ, அன்றி காஷ்மீரில் இந்திய இராணுவம் அல்லல்பட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமோ இருந்திருக்காது.

வியட்னாம் போரில் அமெரிக்கா பயன்படுத்திய போர் விமானங்கள். உலங்குவானூர்திகள், டாங்கிகள் என்பன உலகப் பிரசித்தி பெற்ற நவீன ஆயுதங்களின் ரகத்தைச் சேர்ந்தவை. இப்போரில் அணுசக்தியால் இயங்கும் விமானம் தாங்கிப் போர்க் கப்பல்களைக் கூட அமெரிக்கா பயன்படுத்தியது. இதே போன்று சோவியத் ஆப்கானிஸ்தானில் பயன்படுத்திய போராயுதங்களும் சர்வதேச சந்தையில் கிடைக்கப் பெறாத அளவிற்கு நவீனமானவை. இதேபோன்று துருப்புக்களின் எண்ணிக்கையும், அவர்களின் பயிற்சியும் முதன்மையானவை.

ஆனாலும், விடுதலைப் போராட்டங்களை அவர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. இந்நிலையில், சிறிலங்கா அரசாங்கம் 1000 கோடி ரூபா மூலம் இராணுவத்தை நவீனப்படுத்துவதாலும், துருப்புக்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதினாலும் ஒரு தேசிய இன விடுதலைப் போராட்டத்தை அழித்து விடவோ, அன்றி அடக்கி விடவோ முடியாது.

ஆனால், இதில் முக்கியமானது தமிழ்மக்கள் இவற்றைக் கண்டு அஞ்சாது மன உறுதியுடன் போராட வேண்டும் என்பதே ஆகும். ஆயுதங்களால் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது என்பது எதிர்த்துப் போராடும் ஆற்றல் மக்களுக்கு இருக்கும் வரை தான். இவ் ஆற்றலானது போராடும் மக்களின் மனவலிமை இருக்கும்வரை இருக்கும். ஒருவரின் மனவலிமை அவரின் இறப்பு வரை செயற்படக் கூடியது. அதுவரை எவரும் அவரை வெற்றி கொள்ள முடியாது. இந்நிலையில் இராணுவத்தினரின் எண்ணிக்கையையும், ஆயுதங்களையும் கொண்டு போராட்டத்தை நசுக்கி விட முடியாது; போராடுபவர்களுக்கு வெற்றி என்பது நிச்சயம்.

---

ரஷ்ய ஆயுதங்கள் ஏற்றுமதி தொழில் எதிர்நோக்கியுள்ள வீழ்ச்சி இன்றிருப்பதை விட மிகக்கடுமையானதாக இருக்க முடியாது. 1987ஆம் ஆண்டில் வெளிநாடுகளுக்கு 21பில்லியன் டொலர் ஆயுதங்களை ரஷ்யா ஏற்றுமதி செய்தது. ஆனால் 1992ஆம் ஆண்டில் ரஷ்யாவின் ஆயுத ஏற்றுமதி 2.5 பில்லியன் டொலர்களாக குறைந்துள்ளதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. இது ஏறக்குறைய 90 சதவீத வீழ்ச்சியாகும். 1992ஆம் ஆண்டின் மிகப்பெரும் வீழ்ச்சியிலிருந்து ஓரளவு மீட்சியை ரஷ்ய ஆயுத ஏற்றுமதி பெறுவதை 1993ஆம் ஆண்டிற்கான ஆரம்பபுள்ளி விபரங்கள் காட்டுகின்றன.

கெடுபிடிப்போர் முடிவடைந்ததையடுத்து உலகின் ஆயுதச்சந்தை சுருங்கிவிட்டது. உள்ளூர் ஆயுத இருப்பு குறிப்பிடத்தக்களவு குறைக்கப்பட்டிருப்பதால் ரஷ்யாவின் இராணுவத் தளபாட உற்பத்தி தொழில் உயிர் வாழ்வது கேள்விக்குரியதாகி விட்டது எனவே தாராளகடனே அத்துறையை உயிர் வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான் போன்ற ஏழைகைப்பொம்மை நாடுகளுக்கு முன்னர் ரஷ்யா நன்கொடையாக அல்லது அறவிடப்பட முடியாத இலகு கடன்களாக ஆயுதங்களை வழங்கியது எவ்வாறாயினும் ரஷ்யா உண்மையான வருமான இழப்பிற்கு உள்ளானது. மொத்தவகுமான வீழ்ச்சியால் ரஷ்ய தொழிற்சாலைகள் வாடிக்கையாளர்களுக்கு காலத்திற்கு காலமே பொருள்களையும் உதிரிப்பாகங்களையும் உற்பத்தி செய்யவும் விநியோகிக்கவும் முடிந்தது இவை எல்லாம் ஆயுத விற்பனையை இழே தள்ள தனது வாடிக்கையாளர் அடித்தளத்தை திசை திருப்ப ரஷ்யா பகீரத முயற்சி செய்கிறது. விற்பனையையும் விற்பனைக்குப் பின்னரான சேவையையும் உலகம் முழுவதிலும் உள்ள நாடுகளுக்கு வழங்க ரஷ்யா முன்வந்துள்ளது. இது அமெரிக்காவிற்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரஷ்யா திருப்திப்படுத்த ஆவலாயுள்ள நாடுகளில் ஈரான் ஒன்றாகும். சமீப ஆண்டுகளில் மிக் - 29 போர் விமானம், ரி - 72 பிரதான போர் டாங்கிகள், நீர்மூழ்கிகள் ஆகியவற்றை ரஷ்யா ஈரானுக்கு விற்பனை செய்துள்ளது. கடந்த ஆகஸ்டில் மற்றொரு பெரும் வாடிக்கையாளரான சிரியா ரஷ்யாவிலிருந்து வடகொரிய ஸ்கட் ஏவுகணைகளை வாங்கியுள்ளது

ரஷ்யாவின் மிகப்பெரும் ஆயுத கொள்வனவாளராக சீனா இப்போது உள்ளது. 1992 டிசம்பரில் கைச்சாத்தான ஒரு புரிந்துணர்வு பத்திரத்தின் விதிகளின் கீழ் மிக நவீன ஆயுதங்கள் உட்பட எல்லாத்துறைகளிலும் ஒத்துழைக்க சீனாவும் ரஷ்யாவும் தயாராக உள்ளன

விருப்பிற்குரிய பல வழிகள் ரஷ்யாவுக்கு உள்ளன. உலக ஆயுத சந்தையில் பங்குபோட்டுக்கொள்ள அமெரிக்காவுடன் அந்தரங்கமாக நடவடிக்கை மேற்கொள்வது இதில் ஒன்றாகும்.

ஒன்றில் இருந்து மற்றொன்றாக மாற்றம் செய்வது மற்றொரு சாத்திய வழியாகும். ஆனால் ரஷ்ய அனுபவத்தில் அது அவ்வளவு இலகுவானதல்ல. இராணுவ தளபாட உற்பத்தி வசதிகளை பாவனை நோக்காகக்கொண்ட இயந்திரசாதனங்களாக மாற்றபிரமாண்டமான மூதலீட்டு வசதிகள் தேவைப்படும். செலவுகளைக்குறைக்க ரஷ்ய அரசாங்கம் பெரும்நிர்ப்பந்தத்திற்குள்ளாகி இருப்பதால் தட்டுப்பாடான வளங்களை இவ்வாறான மாற்றத்திற்கு ஒதுக்குவது திறமையற்றதென்றாகும்.

ரஷ்ய கருத்துப்படி மிகுந்த புத்திசலித்தனமான ஒரு அணுகுமுறை தாங்கக்கூடிய பொருளாதார மீட்பை வழங்கமுடியும். ஆனால் இதற்கு வெளிநாட்டுக் கொள்கையில் பெரும் மாற்றங்கள் தேவைப்படும் எல்லா இராணுவ கைத்தொழில்களுக்கும் தற்போது வரிவழங்கப்படும். மானியங்கள், இராணுவத் தளபாடங்களை வெற்றிகரமாக ஏற்றுமதி செய்யக்கூடிய திறமையுள்ள நிறுவனங்களுக்கு திசை திருப்பப்பட வேண்டும். ரஷ்யா ராஜாங்கத் தொழில் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டுமா? எனவினாவியுள்ள அமைச்சர்கள் சபையின் முதலாவது பிரதிப் பிரதமரான ஒலேக்சொஸ்கோவெட். ஆம் என்பதே அதற்கான ஒரேயொரு பதிலாக முடியுமெனவும் கூறியுள்ளார்.

இராணுவத் தளபாடங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்குவரிவிலக்கு வழங்குவது உட்பட பல நடவடிக்கைகள் மூலம்பாதுகாப்புத்தொழிலை உறுதிப்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட ஒரு பிரகடனத்தில் ஜனாதிபதி யெல்சின் கடந்த நவம்பரில் கையெழுத்திட்டார்.

ஆயுத ஏற்றுமதியாளருக்கு உதவுவது ரஷ்யஅரசியல்வாதிகள், பொருளாதார நிபுணர்கள் இப்பொழுது மிகுந்த செல்வாக்கு பெற்ற இராணுவம் ஆகியோருக்கு தடுக்கமுடியாத ஒருயோசனையாகலாம். இது விலைமதிப்பற்றமாற்றக்கூடிய நாணயத்தை சம்பாதித்து தரும் ரஷ்யாவின் இராணுவ கைத்தொழில் அத்திவாரத்தின் ஒரு பகுதியைப் பேணும் தொழில்களை பாதுகாக்கும் செலவுகுறைந்த மரணவியாபாரி என்ற ரஷ்யாவின் பெருமையை உயர்த்தும். வாக்குறுதியளிக்கப்பட்ட மேற்குநாட்டு உதவிக்குபொறுமையுடன் காத்திருப்பதைப் பார்க்கிலும் ஈராக் போன்ற குட்டையைக்குழப்பும் நாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பது கோடிக்கணக்கான டொலர்களை சம்பாதித்துதரும் என்ற முடிவுக்கு ரஷ்யா வரலாம்.

(இன்டர்கோபிரஸ்)

---

## பணியாற்றிய வீட்டில் திருடிய இலங்கை தம்பதிகள்

(துபாய்)

ஐக்கிய அரபு எமிரேட்ஸிலுள்ள சார்ஜா நகரில் வதியும் பிரித்தானிய நாட்டைச்சேர்ந்த பெண்மணியுடைய வீட்டில் பணியாளர்களாக கடமையாற்றிய இலங்கையைச் சேர்ந்த தம்பதிகள் வீட்டில் திருடியமைக்காக அண்மையில் சார்ஜா பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

திருமதி ஏ. பி. கரோல் சார்ஜா பொலிசாருக்கு கொடுத்த முறைப்பாட்டில் தனது அறையிலிருக்கும் நகைப் பெட்டியிலிருந்து இலங்கை நாணயப்படி 130, 000 ரூபா பெறுமதியான தங்க மாலையைக் காணவில்லை என்றும் தனக்கு வீட்டில் பணிபுரியும் தம்பதிகள் மேல் சந்தேகம் என்றும் குறிப்பிட்டார்

புலன் விசாரணைகளை மேற்கொண்ட பொலிசார் குறிப்பிட்ட தம்பதிகளான ஜே ஹஹான்ட், ஆர்லீனா ஆகியோரை விசாரணைக்குட்படுத்திய போது தாங்களே இதைச் செய்ததாக ஒப்புக் கொண்டதுடன் தங்கமாலையையும் ஒப்படைத்தனராம்.

---

ணி மாநிலமான பஞ்சாப்பில் இரு நாடுகளின் படையினரதும் முதலாவது பயிற்சி ஒக்டோபர் மாதத்தில் மேற்கொள்ளப்பட விருப்பதாகவும் இராணுவத் தகவல்கள் தெரிவிக்கின்றன;

இதேவேளை பாகிஸ்தானின் விமானப் படையினருக்கும் அமெரிக்க விமானப் படையினருக்கும் இடையிலான கூட்டுப்பயிற்சியும் இவ்வருடக் கடைசியில் இடம் பெறும் எனவும் தெரியவந்துள்ளது.

இருநாடுகளுக்கிடையிலான இந்தப் பயிற்சித்திட்டம் அயல் நாடான இந்தியாவுக்குப் பிரச்சினையை ஏற்படுத்தும் என்று அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994. 04. 27 புதன் இரவு

08.01 ற்கு- குயிலோசை - ''மேழிச் செல்வம்'' கிராமியநிகழ்வு
08 20 ற்கு - ஏர்முனை - நிகழ்ச்சியில் ''அம்பு தரும் தெம்பு'' சித்திரம்
08 30 ற்கு - செய்திகள்
08.40 ற்கு - நாடகம் - ''தொலை நோக்கு''

1994 04 28 வியாழன் காலை

07.02 ற்கு - மாவீர வணக்கம்
07.15 ற்கு- விடுதலைக் கீதங்கள்
07.30 ற்கு - செய்திகள்
07.35 ற்கு - பத்திரிகைச் செய்திகள்
07.40 ற்கு - தொடர்ந்து விடுதலை கீதங்கள்

# தாய். விமானம் வீழ்ந்து நொருங்கியது 265 பயணிகள் பலி; ஆறுபேர் மீட்பு

## ஜப்பான் விமான நிலையத்தில் கோரச் சம்பவம்

(டோக்கியோ)
தாய்லாந்து நாட்டு விமான மொன்று நேற்று ஜப்பானில் தரையிறங்கும் போது நொருங்கியது இதனால் இதில் பயணம் செய்த 265 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

நைப்பே விமான நிலையத்திலிருந்து நேற்று ஜப்பான் நாட்டின் நாகஸ்கோ விமான நிலையம் நோக்கிப் பறந்த இவ் விமானம், தரையிறங்கும் போது விபத்து நேரிட்டது இதில் பயணம் செய்தவர்களில் ஆறு பேர் மட்டுமே உயிருடன் இதுவரையில் மீட்கப் பட்டுள்ளனர்.

யாழ். ஸ்ரீதர் திரையில்...
28 - 4 - 94 வியாழன் முதல்...
உங்கள் கண்ணெதிரில்...
போராளிகளும், மக்களும் இணைந்து வழங்கும்
நிதர்சனம் நிறுவனத்தின் சிறப்பு வெளியீடு
காற்று வெளி
(முழு நீள வண்ணப்படம்)
தரமான கலைப் படைப்பின்
திறமான கருத்தோவியம்
★ மக்களோடு புலிகள்
★ சண்டைக் காட்சிகள்
★ நெஞ்சையுருக்கும் சம்பவங்கள்
உங்கள் இதயங்களில் இடம்பிடிக்கும்
இன்னும் பல அரிய கண்ணைக்கவரும்
வண்ணக் காட்சிகள்
மறவாதீர்கள் காற்றுவெளி
தவறாதீர்கள் பார்த்து மகிழ
கதை
வசனம்
நெறியாள்கை
ஞானரதன்
ஒளிப்பதிவு: தவா, திலகன், றியோ
நடிகர்கள்: றியோ, இரட்ணவடிவேல், வேபி சரோஜா, நிசாம, மற்றும் மலர்
இசை: பிரியராஜ், முரளி

### மேதினத்தை

சக்தியை தத்துரூபமாகச் சித்திரிக்கப்பட்ட வர்ணக் கொடிகளைத் தாங்கி வீதிகளில் பவனிவரும் வாகனங்கள் மற்றொருபுறமாக மேதின எழுச்சியை மக்களின் மனங்களிற்கு ஊட்டிக்கொண்டிருக்கின்றன. கடந்த வாரத்திலிருந்து மேற்கொள்ளப்பட்ட மேதின ஏற்பாடுகள் தற்பொழுது இறுதிக்கட்டத்தை அடைந்திருக்கின்றன

யாழ். குடாநாட்டின் நகரப்பகுதி உட்பட புறநகர்ப் பகுதிகள் மற்றும் கிராமப் புறங்கள் அனைத்தும் மேதின எழுச்சிக்கான ஏற்பாடுகள் காரணமாக எழுச்சிக்கோலம் பூண்டு வருகிறது. அதுமட்டுமன்றி மேதின எழுச்சிப் பேரணிக்கான ஏற்பாடுகளும் அதற்கான அணிவகுப்பு ஒத்திகைகளும் நடைபெற்று வருகின்றன (க)

### உயர்

மருத்துவ மனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. விசாரணை குறித்து உயர் இராணுவ அதிகாரிகள் உன்னிப்பாகக் கவனித்து வருகிறார்கள் எனத் தெரியவருகிறது.

### மண்டூரில்

துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மண்டூரில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி ஒன்றிலேயே இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது. விசேட அதிரடிப்படையினர் ஒழுங்கு செய்த இவ் வைபவத்தில் உயர் இராணுவ அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டதாக பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன இவ் வைபவத்தின் இறுதியில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியைத் தொடர்ந்து உயர் இராணுவ அதிகாரிகள் மேடையைவிட்டு இறங்கும் போதே இக் குண்டு வெடிப்புச் சம்பவம் நடைபெற்றது.

இச் சம்பவத்தைத் தொட...

## கொலரா தீவிரம்

(வடமராட்சி)
வடமராட்சியில் மேலும் 'கொலரா' நோய்க்கு சிலர் இலக்காகி வருகின்றனர். இந் நோய் இப் பகுதியில் தீவிரமடைந்து வருகிறது கொலரா நோய்க்கு இலக்கான இருவர் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வடமராட்சியில் பொலிகண்டி, கரணவாய், குடத்தனை பகுதிகளில் இந் நோய் காணப்படுகிறது முன்னரும் இரு வயோதிபர்கள் இந் நோய்க்கு இலக்காகி மரணமானதும் குறிப்பிடத்தக்கது. பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு இந்நோயினால் பீடிக்கப்பட்டு வரும் கடுமையானவர்கள் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்படுகின்றனர். (யோ)

## சுகாதாரம் பேணல் கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)
அரியாலை சாம்சன் குடியிருப்பு மக்களினால் 'சுகாதாரம் பேணல்' சம்பந்தமான கலை நிகழ்ச்சிகள் 25 ம் திகதி திங்கள் நடாத்தப்பட்டன தொற்று நோய்கள் பரவாது தடுப்பதற்கு சுகாதாரத்தைப் பேணி வாழ்தல் அவசியம் என்பதை வலியுறுத்தி மக்களினாலேயே தயாரிக்கப்பட்ட பலவித கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. குடியிருப்பை நிர்வகித்து வரும் சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதிநிதிகளும் இந் நிகழ்வுகளைப் பார்த்து, பாராட்டியதோடு சிறந்த கலை நிகழ்ச்சிகளுக்கு பரிசில்கள் வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (22)

## உதைபந்தாட்ட போட்டிகள்

மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் உதயசூரியன் வி. கழகத்தை எதிர்த்து சில்வஸ்ரார் விளையாட்டுக் கழகமும், யங்கென்றீசன் வி. கழகத்தை எதிர்த்து கோல்ஸ்ரார் வி. கழகமும் விளையாடவுள்ளன போட்டி மாலை 3.00 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்

★ ★

அளவெட்டி விநாயகர் வி கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று...

# பூமி சுற்றுப் பாதையில் சூரியனைச் சுற்றவில்லை

## இலங்கை விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு

பூமி சூரியனை சுற்றிய பாதையில் வலம் வருவதாக கூறப்படுவது தவறானது என இலங்கையின் விண்வெளி ஆய்வாளரான கே ஏ டொன் வனசரட்ன தெரிவித்துள்ளார்

பூமியினதும் சூரியனதும் நகர்வு குறித்து அவர் வெளியிட்டுள்ள புதிய கொள்கை ஒன்றிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பூமியும் தனது அச்சில் சுழல்வதாக கூறப்படுவது தவறானதுஎன்றும் இவர் கூறுகிறார்.

மனிதர் வரலாற்றில் உண்மைநிலை பற்றித் தம் முன் தீர்மானித்த எண்ணக் கருக்களை நம்பினார்கள். பெரும்பாலும் உண்மைநிலை பற்றிய எண்ணக் கருக்கள் முற்றிலும் தவறானவை. அல்லது அதில் ஒரு பகுதி தவறானது என்று பின்னர் உணர்ந்து கொள்ளப்பட்டது.

கலிலேயோ, கொப்பர்னிக்கஸ் காலத்துக்கு முதல் முழு உலகத்துக்கும் மையம் பூமி என்றும் சூரியன் பூமியைச் சுற்றி வருவதாகவும் நம்பப் பட்டது

இப்போது பூமி, சந்திரன் மற்றும் கிரகங்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன என்றும் அத்துடன் பூமி தனது அச்சில் தன்னைத்தானே சுற்றுவதாகவும் நம்பப்படுகிறது. இந்தக் கோட்பாடும் தவறானதா?

'பூமி மற்றும் சூரியனது இயக்கம்' என்ற புதியதொரு கோட்பாட்டை சிறிலங்காவைச் சேர்ந்த விண்வெளி ஆய்வாளரான கே ஏ. டொன் வனசரட்ன முன்வைத்துள்ளார். அவரது கோட்பாட்டில் பூமி அண்ட வெளியில் ஒரு புள்ளியைச் சுற்றி வருவதாகவும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் பூமி அதன் சுற்றுப்பாதையில் சூரியனைச் சுற்றவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவரின் கூற்றுப்படி பூமி அதன் அச்சில் தன்னைத் தானே சுற்றவுமில்லை. இவ்வாறு கே. ஏ. டொன் வனசரட்ன ஒருபுதிய கோட்பாட்டை முன்வைத்து அதை நிலைநாட்ட முயற்சிக்கிறார்.

கம்பஹாவைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் மான்செஸ்டர் பல்கலைக் கழக வானொலி விண்வெளி ஆய்வு நிலையத்தில் தனது புதிய கண்டுபிடிப்பு குறித்து விளக்கினார்

இங்கிலாந்திலுள்ள இந்த ஆய்வு நிலையம் நடைமுறை சார்ந்த அவதானிப்புகளுடன் சம்பந்தப்பட்டது. கோட்பாடுகள் பற்றி இந்த நிலையம் அக்கறை காட்டுவதில்லை என்று கூறும் கே. ஏ. டொன் வனசரட்ன இந்த ஆய்வு குறித்து மற்றவர்களுடன் ஆலோசனை கலக்கவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கொப்பர்னிக்கஸ், யேகன்ஸ் ஹெல்பர், ஐசாக் நியூட்டன் ஆகியவர்களின் கண்டுபிடிப்புகள் தான் தனது கோட்பாட்டுக்கு அடிப்படை என்று கூறும் அதே வேளை அவர்களது கண்டுபிடிப்புகளிலிருந்து தனது கோட்பாடு முன்னேற்றமானது என்கிறார்

கே. ஏ டொன் வன்சரட்ன சுயமுயற்சியால் முன்னேறியவர் சுயமாகக் கற்றல், கவனம், அவதானிப்பு ஆகியவற்றால் முன்னேறியவர்

இதுபோன்ற ஒரு ஆய்வுக்குச் சிறிலங்காவில் வசதிகள் இல்லை என்று கூறும் அவர், தனது கோட்பாட்டின் அடிப்படை கணிதம் என்கிறார்.

# ராஜீவின் கொலையே புலிகள் தடைக்கு போதும்

### தமிழக அமைச்சர்

இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலையுடன் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரே விடயம் மட்டுமே விடுதலைப் புலிகள் இயக்கம் தடை விதிக்க வேண்டும் என்று கோரப்படுவதற்கு போதுமானதாகும் என்று தமிழக அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரம் கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் மத்திய அமைச்சர் ராஜேஷ் பைலட் வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளிக்கும் முகமாக அறிக்கையொன்றை அவர் வெளியிட்டுள்ளார்.

# ஜெயின் ஆணைக்குழுவுக்கு மத்திய அரசு ஆதரவில்லை

ராஜீவ் காந்தி கொலை நடந்த சூழல் பற்றி விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஜெயின் ஆணைக்குழு தனது நடவடிக்கைகளுக்கு மத்திய உள்துறை அமைச்சின் ஆதரவு கிடைக்கவில்லையென்று குற்றம்சாட்டியுள்ளது

நேற்று புதுடில்லியில் கூடிய இவ் விசாரணைக் குழு அரசு ஒத்துழைப்பு தரத் தவறியிருப்பதால் தமது நடவடிக்கைகள் மூன்று ஆண்டுகளுக்கு மேல் நீடிக்க வேண்டியேற்பட்டிருப்பதாக தெரிவித்துள்ளது.

மத்திய உள்துறை அமைச்சு பத்துசதவீத பத்திரங்கள் மட்டுமே தமது பரிசீலனைக்கு தந்திருப்பதாகவும், ஏனைய பத்திரங்களை பாதுகாப்பு காரணங்களுக்காக வழங்கப் படவில்லை என்றும் கூறப்படுகிறது.

# பிலிப்பைன்சில் ஆயுதம் வாங்க முயற்சி

(கொழும்பு)
இலங்கையின் தமிழ்ப் போராளிகள் சிலர் பிலிப்பைன்சில் ஆயுதங்கள் வாங்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிலிப்பைன்சில் அரசுக்கு எதிராக ஆயுதப் போர் நடத்திவரும் மன்டாளோ போன்ற பகுதிகளில் சுற்றுப்பயணிகள் போல விஜயம் செய்து ஆயுதங்கள் வாங்க முற்பட்டிருப்பதாக அதிகாரி ஒருவர் மேலும் தெரிவித்தார்.

# புலிகள் தொடர்பே காரணம்

றியோ [illegible]பி சரோஜா
நிசாம
மற்றும் ஜலர்
தயாரிப்பு **நிதர்சனம்** (சி-9265)


# A/L 96

## கலை, வர்த்தகம்

அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க

**மீண்டும் ஓர் புதிய பிரிவு**

ஆரம்பம் **30-4-94** சனி 7.00 A. M

- மாணவர் சமூகம் நன்கு அறிந்த எமது வழமையான ஆசிரியர் குழு
- பிரிவு I, பிரிவு II என்பவற்றிற்கான அனுமதிகள் ஏற்கனவே நிறுத்தப்பட்டுவிட்டன.
- புதிய பிரிவிற்கு குறிப்பிட்டுள்ள மாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும்.

நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9273]


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1994ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

[illegible]டையைவிட்டு இறங்கும் பேரதே இக் குண்டு வெடிப்புச் ச[illegible]பவம் நடைபெற்றது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து அப் பகுதி[illegible]ளில் தேடுதல் நடாத்திய படையினர் பலரைக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

### வட[illegible]குதி

இராணுவத்தில் மேலும் மூன்று படைப் பிரிவுகள் வடக்கு, கிழக்கு பகுதிகளில் செயற்படும் என்று அறிவிக்கப்படுகின்றது- அநுராதபுரம் மற்றும் மட்டக்களப்பு பகுதிகளிலுள்ள இராணுவ தலைமைய[illegible]ங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டு இப் புதிய [illegible]டைப் பிரிவுகள் செயற்படுமெனக் கூறப்படுகின்றது.

இம் மூன்று படைப் பிரிவு[illegible]ளுக்கும் தனித்தனியே மூன்று மேஜர் ஜெனர[illegible]கள் பதவியில் அமர்த்தப்படுவார்கள் என்றும், அதற்கான பிரிகேடியர் தரத்திலுள்ள மூன்று அதிகாரிகள் பதவி உயர்த்தப்படுவர்


## யாழ் ஸ்ரீதர் திரையரங்கில்

SYLVESTER-STALLONE

நடித்த

## RAMBO

தினசரி மாலை 4.00, 6.00

சனி, ஞாயிறு காலை 10 30

மாலை 4.00, 6-00 மணி

பெப்ரவரி 94

## ஒளிவீச்சு

சனி, ஞாயிறு பி பகல் 2-30 மணிக்கு காண்பிக்கப்படும்

(சி-9250)


[illegible] கழகத்தால் நடாத்தப்படும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் இணுவில் மைதானத்தில் (இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமை) ஆரம்பமாகிறது இன்றைய போட்டிகளில் லக்கி ஸ்ரார் வி கழகத்தை எதிர்த்து சத்தியா வி கழகமும், அரியாலை ஐ. வி. கழகத்தை எதிர்த்து ஜொலிபோய்ஸ் வி கழகமும் விளையாடவுள்ளன. போட்டி பிற்பகல்3.00மணிக்கு ஆரம்பமாகும்.

### ஐ. தே. க.

கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து உறுப்பினர்களின் கருத்துக்கள் இக் கூட்டத்தில் அறியப்பட்டன. உறுப்பினர்களின் கருத்துக்கள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு அறிவிக்கப்படும் என கூட்டத்தில் உறுதியளிக்கப்பட்டது.

### சுதந்திரக்கட்சி

யில் பேச்சுவ[illegible]ர்த்தை நடாத்தியுள்ளார்.

கடந்த வார முற்பகுதியில் நடைபெற்ற இச் சந்திப்புக் குறித்து கொழும்பில் இருந்து வெளியாகும் ''திருலே'' என்ற சிங்களப் பத்திரிகை முன்பக்கச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சிக்கு தென்மாகாணசபைத் தேர்தலில் கிடைத்த தோல்வியைத் தொடர்ந்தும் தற்போது கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை காரணமாகவும் தான் அக் கட்சியில் இருந்[illegible] வெளியேற விரும்புவதாகவும் தன்னை மீண்டும் சிறிலங்கா சு[illegible]ந்திரக் கட்சியில் சேர்த்துக் கொள்ளும் படியும் திரு. அநுரா பண்டார நாயக்கா மேற்படி சந்திப்பில் கோரிக்கை விடுத்ததாகவும் கூறப்பட்டுள்ளது

### பெண்கள்

வரை என்ன ந[illegible]ந்தது என்பது பற்றித் தெரியவரவில்லை எனவும் கூற[illegible]படுகின்றது.

இவ் விசாரணைக் குழு அரசு ஒத்துழைப்பு தரத் தவறியிருப்பதால் தமது நடவடிக்

# புதுச்சேரி பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் இல்லை

### [illegible]நில முதல்வர் தெரிவிப்பு

(புதுச்சேரி)

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் எதுவுமில்லை என்றும், விடுதலைப் புலிகளின் ஊடுருவலை தடுக்க போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றது என்றும் புதுச்சேரி மாநில முதல்வர் வி. வைத்திலிங்கம் கூறியுள்ளார்,

தமிழக முதல்வர் ஜெயலலித[illegible] இது தொடர்பாக வெளியி[illegible]டிருக்கும் கருத்துக்கள் தொடர்பாக சட்டப் பேரவை உறுப்பினர்கள் சிலர் கவலை தெரிவித்ததை அடுத்தே முதல்வர் வைத்திலிங்கம் இதனைத் தெரிவித்தார்

# மீனவருக்கு நஷ்ட ஈடு பெற முயற்சி

(நமது நிருபர்)

கடந்த கால இராணுவ நடவடிக்கைகளின் போது உயிரிழந்த மீனவர்களுக்கான நிவாரண கொடுப்பனவுகள் விரைவில் [illegible]ழங்கப்படலாம் என எதிர்பார்க்கப் டுகிறது.

பல காலமாக உயிரிழந்த மீனவர்களுக்கான நிவாரணம் கொடுபடாதிருப்பது தெரிந்ததே. தற்போது இதனைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அரசாங்க அதிபர் ஈடுபட்டுள்ளார்.

இ[illegible] வரை இந் நிவாரணத்தைப் பெறாதிருக்கும் குடும்பங்கள் பற்றிய விபரங்களை திரட்டித் தரும[illegible]று ஒவ்வொரு பிரதேச செயலர்களையும் அவர் கேட்டுள்ளார். இவ் விபரங்கள் கிடைக்கும் பட்சத்தில்இந் நிவாரணத்தைப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் தான் ஈடுபடவுள்ளதாக அரச அதிபர் உறுதியளித்துள்ளார். (ச, சி)

### வடக்கின்

இதுகால வரையும் வடபகுதி தலைமையின் கட்டுப்பாட்டின் கீழ் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்கள் இருந்தது தெரிந்ததே

படவில்லை என்றும் கூறப்படுகிறது.

# காரணம்

(டில்லி)

விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருந்ததாகக் கூறப்பட்டதாலேயே கருணாநிதி தலைமையிலான தி மு[illegible] க. அரசு கலைக்கப்பட்டதாக முன்னாள் பிரதமர் எஸ். சந்திரசேகர் தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாகஆராயும்ஜெயின் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளித்த அவர் மேலும் கூறுகையில்அரசியலமைப்பின் 356 வது பிரிவின்படி மாநில அரசைக் கலைப்பதற்கு மாநில ஆளுநரின் அறிக்கை அவசியமாக இருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

# மரண அறிவித்தல்

## ஏரம்பு அன்னம்மா

காரைநகர் களபூமி கருவியாத்தனையைப் பிறப்பிடமாகவும், எமர்சர்வீதி கிளிநொச்சியில் வசித்தவருமாகிய ஏரம்பு அன்னம்மா 26-4-94ல் சிவபதமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் ஏரம்புவின் அன்பு மனைவியும், முருகவேல் (கிளிநொச்சி), சிவபாலன்(துப்பாசி (லண்டன்) சுந்தரலிங்கம் (லண்டன்), தருமலிங்கம் (கனடா), காலஞ்சென்ற தெய்வேந்திரன், அமராவதியின் அன்புத் தாயாரும், சாரதாதேவி, விக்னேஸ்வரன், சாந்தினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், நாகலிங்கம், காலஞ்சென்ற இராசையா, இராசதுரை (செல்வம்) செல்லமுத்து, தங்கம்மா, சிவமணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக 28-4-94 வியாழக்கிழமை மாலை 2·00 மணிக்கு கிளிநொச்சி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

ஏ. முருகவேல் (மகன்)

எமர்சர் வீதி, கிளிநொச்சி.

(8141)